# வருடாந்த அறிக்கை 2013

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

# தலைவரின் செய்தி



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை தனது நீண்டகால பயணத்தில் மறுமலர்ச்சி கண்டுள்ள இந்தக் காலகட்டத்தில், அதன் தலைவர் என்ற ரீதியில்,2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தொடர்பில் ஒரு செய்திக் குறிப்பை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சக்தி வளங்கள் படிப்படியாக தேய்ந்து அற்றுப்போகும் இன்றைய உலகில், அத்தகைய வளங்களைப் பாதுகாப்பதற்கு அதிக கவனம் செலுத்தப்படுவதற்கு காரணம் அந் தவளங்களின் அடிப்படையில் அனைத்தும் தீர்மானமானிக்கப்படுகின்றன என்ற அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாலாகும். இலங்கையில் மின்சார உற்பத்தி நீர்வலுவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டாலும், மனிதனின் தேவைகள் வரையறையற்றவை என்பதால் விவசாய தொழில்நுட்ப துறைகளில் உன்னத மேம்பாட்டிற்கு அனல் சக்தியை மனிதன் நாடியுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. எங்களுக்கு எண்ணெய் அல்லது நிலக்கரி வளங்கள் இல்லையென்றாலும், இலங்கை தனக்கென்று சக்தி வளங்களை உருவாக்கிக் கொள்ளும் போது, மசகெண்ணெய்யில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த

நிலைமையை சற்றும் பாரதீனப்படுத்தி விடமுடியாது. இதன் ஒரு பிரதிபலான, உலகலாவிய கேள்வி துரிதமாக அதிகரித்துச் செல்வதால் எரிபொருட்கள் எதிர்கால பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றன.

இந்தப் பாதகமான விளைவுகளை சரியான விதத்தில் புரிந்து கொண்டு பொறுப்புடன்தொழிற்பட்டு,நிலவுகின்ற பிரச்சினைக்கு நிலையான ஒரு தீர்வைக் கண்டுகொள்ளும் ஒரு பரம அபிலாஷையை முன்னிட்டு, 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தினால் நிலைபெறுதகு வலு அதிகார தாபிக்கப்பட்டிருப்பது மின்சக்தியில் பாதுகாப்புடைய ஓர் இலங்கையை கட்டியெழுப்புவது என்ற ஒரு தூரநோக்கிலாகும். நாட்டில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் துறையையும் மற்றும் மின்சக்தியின் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கான கொள்கைகளைத் திட்டமிட்டு செயற்படுத்தும் கேந்திர நிலையமாக இந் தஅதிகார சபை மாறியிருப்பது விஷேட அதிகார சட்டங்களின் மூலம் உரித்துக் கொண்டதாலாகும்.

இந்தஅதிகார சபையின் முக்கிய நோக்கமாக அமைவது யாதெனில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி, மின்சக்தி வினைத்திறன், மற்றும் பயனுள்ள விதத்தில் மின்சாரத்தை விநியோகித்தல்முதலிய அம்சங்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் மின்சக்தியின் பாதுகாப்பை உண்மைப்படுத்தும் வகையில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பதாகும். தேசிய திட்டமிடலின் போது, இந்த எண்ணக்கருவினது முக்கியத்துவத்தின் பால் கவனம் செலுத்தி, மஹிந்த சிந்தனை எதிர்கால தூரநோக்கத் திட்டத்தினுள் 2020 ஆம் ஆண்டளவில், புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தில் மின்சார வலையமைப்புக்கு 20% வீதம் பங்களிக்கச் செய்வதற்கும் மற்றும் உண்மையான பாவனைக்கு மின்சாரத்தை சேமிக்கும் போக்கை 8.7% வீதத்தால் அதிகரிப்பதற்கும் இலக்குக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைந்து கொள்வதானது, நாட்டிலுள்ள போதிய பாரம்பரிய சக்தி வளங்களின் பயன்பாடுஊக்குவிப்பு மற்றும் மின்சக்தித் துறை, சக்தி வினைத்திறன் மற்றும் சுற்றாடல்நேயம் என்பவற்றுக்கு காரணமாக அமையும்.

இலங்கையில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள மூலங்கள் ரீதியில் பார்க்கும் போது, விஷேட கவனம் செலுத்தப்பட்டிருப்பது சிறிய நீர்வலு, காற்றுமூல சக்தி மற்றும் உயிரணுத்திணிவு சக்தி என்பவற்றிலாகும். இவ்வாறு நிகழ்ந்திருப்பது இலங்கை போன்ற நாட்டில் உற்பத்தி செய்ய முடிவது அந்த சக்தி மூலங்கள் இருப்பதன் காரணத்தினாலாகும்.

மின்சக்தி வளமுடைய ஒரு எதிர்கால பரம்பரையினரை கட்டியெழுப்பும் கரும பணியை இங்கு மறந்து விடமுடியாது. இதில் நாம் மிகவும் நம்பிக்கை கொண்டிருப்பது தேசத்தின் சிறுவர் பரம்பரையிலாகும். நாளைய தினத்தில் உலகை வெல்லும் சிறுவர் பரம்பரை மின்சக்தியின் பாதுகாப்பும் அதன் முக்கியத்துவமும் பற்றிய அறிவுடையவர்களாக விளங்குவார்களாயின், எமது தேசிய கரும பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை. தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து பாடசாலை விஞ்ஞான பாட விதானத்தினுள் மின்சக்தி மற்றும் மின்சக்தியின் பாதுகாப்பு பற்றிய பாட விடயத்தை உள்ளீர்ப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது இதன் காரணத்தாலாகும். அத்துடன் நின்றுவிடாத, நாம் முன்பள்ளிடக்கூட ஆசிரியைகளின் அறிவில் மின்சக்தியின் பாதுகாப்பு விடயத்தை உள்ளீர்க்கும் நிமித்தம் ஆக்கபூர்வமான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தையும் முன்னெடுத்துள்ளோம். இலங்கை சாரணர் இயக்கத்துடன் இணைந்து சாரணர் திறன் பாட விதானத்தினுள் மின்சக்தியின் பாதுகாப்பு விடயத்தை உள்ளீர்த்தமை மற்றும் சாரணர் திறன்கள் இலட்சினையை அறிமுகப்படுத்தியமை ஆகியனவும் எமது நாட்டு எதிர்கால சந்ததியினரை மின்சக்தியினது பாதுகாப்பின்

நிமித்தம் ஈடுபடச்செய்யும் கரும பணியை வலுப்படுத்துவதற்காகும்.

மின்சக்தியில் பாதுகாப்பு வாய்ந்த ஓர் இலங்கையை நோக்கிய பயணத்தின் முன்னோடி நிறுவனம் என்ற ரீதியில் எப்பொழுதும் முன்நிற்கும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் பணிப்பாளர்கள் சபைஅங்கத்தவர்களும், பணிப்பாளர் நாயகமும் மற்றும் பதவியணியினரும் நாம் செல்லும் இந்தப் பயணத்திற்கு நல்கும் உதவி ஒத்தாசைகளை இங்கு உளப்பூர்வமாக நினைவூட்டி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**
**பிரசாத் கல்ஹேன**
**தலைவர்**

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி - வருடாந்த அறிக்கை - 2013



பதவியணி சார்பாக, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச.) வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் இந்தச் செய்தியை விடுப்பதற்கு கிடைத்த வாய்ப்பையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். 2013 ஆம் ஆண்டில், இ.நி.வ.அ.ச. அடைந்த முக்கிய சாதனைகளை மெச்சிப் பாராட்டுவதற்கு இது ஒரு பிரத்தியேக சந்தர்ப்பமாகும் என நினைக்கின்றேன். இ.நி.வ.அ.ச. தனது குறிக்கோள்களினது நிரல்களுக்கு மத்தியில், 2013 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக அக்கறையுடைய தரப்புகளுடன் மிகவும் நெருக்கமான முறையில் தொழிற்பட்டு, அதனூடாக மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி, சக்தி வினைத்திறன் மற்றும் அறிவு முகாமைத்துவம் ஆகிய பரந்த துறை சார்ந்த பிரிவுகளில் தலையீட்டைக் கொண்டு இலங்கையை ஓர் சக்திப் பாதுகாப்பு நிறைந்த நாடாக ஆக்குதல் என்ற தேசிய குறிக்கோளை அடைவதில் வழிகாட்டி வருகின்றது. தன்னிடமிருக்கின்ற அயராத, அர்ப்பணிப்புடைய ஊழியர்களையும், தனது வளங்களையும் உச்சளவில் பயன்படுத்தியதனூடாக இந்த சகல பிரிவுகளிலும் கணிசமான அபிவிருத்திகளை இ.நி.வ.அ.ச. மூலம் அடைய முடிந்தது. இந்த 2013 ஆம் ஆண்டானது சக்தித் துறையில் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தும் போது சமூக மற்றும் சுற்றாடல் நிலைபெறுதகுதன்மையுடைய அம்சங்களில் அதிக கவனத்தைச் செலுத்துவதற்கு இயன்ற வகையில், அனுபவத்தைத் தூண்டுவதனூடாக சுற்றடால் அமைச்சின் கீழ் இந்த இ.நி.வ.அ.ச. சபையை உன்னத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. இது ஒரு தனி எண்ணக்கருவை அங்கீகரிக்கின்ற கருத்திட்ட அங்கீகார நடபடிமுறையில் சம்பந்தப் படும் ஏனைய அதிகார சபைகளுடனும் மற்றும் நிரல் முகவராண்மைகளுடனும் உறவுகளை மேலும் வலுப்படுத்திற் கொள்ளும் வகையில் இ.நி.வ.அ.ச. சபைக்கு மேலும் உறுதுணையாக அமையும். 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இ.நி.வ.அ.ச. குறிப்பாக சிறிய நீர்வலு, காற்று சக்தி, சூரிய சக்தி மற்றும் உயிரணுத்திணிவுச் சக்தி முதலியவற்றைக் கொண்டு க்றிட் மின் சக்திக் கொள்திறனை மேலும் அதிகரிக்கும் முகமாக SPP

சம்பந்தப்பட்ட கருத்திட்ட அபிவிருத்திகள் மற்றும் சக்தி வள வரைபடம் ஆகியவற்றினூடாக மீளப்புதுப்பிக்கத் தகு (மீ.பு.ச.வ.) சக்தி வளத்தில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டிலிருந்து மின்சக்தித் திணித்தல் கட்டணம் கிடைக்கப்பெறாமலினாலும் மற்றும் க்றிட் மின்சார இணைப்பில் வரையறை விதிக்கப்பட்டதனாலும் சவால்கள் எழுந்த போதிலும் கூட, 2013 ஆம் ஆண்டில் பதினாறு சிறிய நீர்வலு மின்னுற்பத்திப் பொறித்தொதிகளும், ஒரு உயிரணுத்திணிவுச் சக்தி மூல மின்னுற்பத்திப் பொறித் தொகுதியும் மற்றும் ஒரு காற்று சக்தி மூல மின்னுற்பத்திப் பொறித்தொகுதியும் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டன. இத்தகைய பொறித்தொகுதிகளின் மொத்த நிலையான சக்திக் கொள்திறன்கள் முறையே 26.5 MW, 5.0 MW மற்றும் 4.8 MW என்ற அளவில் காணப்பட்டன. மொத்தம் 351.6 MW நிலையான மீ.பு.ச. மற்றும் 1168.7 GWh வருடாந்த சக்தி உற்பத்தி ஆகியவற்றுக்கு இது காரணமாக அமைந்ததுடன், மேலும் 9.74% க்றிட் மின்சார உற்பத்திற்கும் காரணமாக விளங்கியது. ஆதலால், எதிர்காலத்தில் அதாவது 2015 ஆம் ஆண்டு 10% வீதத்தை அடைதல் என்ற இலக்கு அடையப்பட்டது. SPP சூரிய சக்தியில் சக்திக் கொள்திறன் சேர்வுகள் இல்லாதிருந்தும், அண்ணளவாக 3MW சக்திக் கொள்திறனுடைய தேறிய சூரிய சக்தி மாணிவாசிப்புக் கருத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன. தேசிய க்றிட் மின்சார முறைமை விரிவாக்கத்தினூடாக ஓப்-க்றிட் மின்சாரத் துறை மேலும் கணிசமானளவு வீழ்ச்சியை அடைந்து வருகின்ற போதிலும், இ.நி.வ.அ.ச., ஏற்கெனவே இயங்கி வரும் சிறிய நீர்வலு மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகள் தொடர்பில் தொடர்ந்தும் உதவி வருகின்றது.

அனைத்து முடிவுப் பயன் சக்தித் துறைகளையும் இலக்காகக்கொண்டு 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சக்தி வினைத்திறன் மேம்பாடுகளுக்கும் பாதுகாப்புக்கும் தேவையான பல தலையீட்டு நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டன. 2011 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட சக்தி முகாமையாளர்கள் மற்றும் சக்திக் காய்வாளர்கள், மற்றும் தேசிய சக்தி முகாமைத்துவத் திட்டம் (EnMAP) பற்றிய ஒழுங்குவிதிகளின் நிரலில், குறித்த உப துறைகளின் நிமித்தம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளில் பல பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. கருத்தரங்குகள், வெகுஜன ஊடக

பிரசார நடவடிக்கைகள், அச்சீட்டுப் பொருட்களின் அபிவிருத்தி என்பன அடங்கலாக பல அறிவு முகாமைத்துவ செயற்பாடுகளினூடாக, வீட்டுத் துறையின் சக்திப் பாதுகாப்பு உணரப்பட்டது. வீடு, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில், 2013 ஆம் ஆண்டு 22.6 GWh என்ற கணிசமான ஒரு சக்தி சேமிப்பு இலக்கை, இந்தத் தலையீடு சார்ந்த நடவடிக்கைகளினூடாக, இ.நி.வ.அ.ச. மூலம் அடைய முடிந்தது. இது தவிர, எரிபொருள் சுவிட்சிங் என்றழைக்கப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, 19.6 மில்லியன் லீற்றர் எண்ணெய், மற்றும் 200 டொன் எரிவிறகு என்ற கணிசமானளவு சேமிப்பு இலக்கும் அடையப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறையில் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டமை 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முக்கிய செயற்பாடாக விளங்கியது. இது 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சக்தி வினைத்திறன் மற்றும் சுற்றாடல் நேயமான நிலைபெறுதகு தன்மை வாய்ந்த முறைமைக்கான (E3ST) செயல்திட்டத்தின் வகுத்தமைப்பு கலந்துரையாடல் குழு, இலங்கையில் ஓட்டும் துவிச்சக்கரவண்டியின் தயாரிப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், வாகன வீதி வரைபடம் மற்றும் தூய எரிபொருட்கள் பற்றிய கலந்துரையாடல் போன்ற மூன்று பிரிவு சார்ந்த முக்கிய அம்சங்கள் 2013 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன.

சக்தி மற்றும் சுற்றாடல் ஆகியன சம்பந்தப்பட்ட சவால்கள் இன்னும் அதிகரித்த நிலையில் இருக்கின்ற படியால், நாட்டின் எதிர்கால அபிவிருத்தி வழிகாட்டல்களுக்கு இது ஒரு உந்து காரணியாக அமையலாம். இ.நி.வ.அ.ச. எதிர்வரும் ஆண்டுகளில் அதிகளவான கேள்வி சார்ந்த பொறுப்புக்களைக் கொண்டிருக்கும். இ.நி.வ.அ.ச. முன்னெடுத்த நிகழ்ச்சித்திட்டங்களும், தயாரித்த செயல் திட்டங்களும் சக்திப் பாதுகாப்பை அடையும் வகையில் நாட்டிற்கு வழிகாட்டக்கூடியதாகவும், மற்றும் அதன் மூலம் நாட்டின் பிரத்தியேக பொருளாதார அபிவிருத்திற்குப் பங்களிக்கக் கூடியதாகவும் இருக்கும் என நான் திடமாக நம்புகின்றேன்.

கலாநிதி துஷித்த சுகதபால
**பணிப்பாளர் நாயகம்**

## எமது தூரநோக்கு

மின்சக்தி பாதுகாப்புடைய ஓர் இலங்கை என்பது எமது தூரநோக்காகும்.

## எமது செயற்பணி

அகழ்வு, ஆராய்ச்சி, வசதிகள் விநியோகம், ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி மற்றும் அதே போன்று அறிவு முகாமைத்துவம் என்பவற்றினூடாக உள்நாட்டு சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சக்தி வளங்களை சேமிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் தேசிய முயற்சிக்கு வழிகாட்டுவதும், அதனூடாக இயற்கைவளங்கள், மனித வளங்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பவற்றைப் பாதுகாத்து இலங்கையின் மின்சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு வழிசமைத்தல் எமது செயற்பணியாகும்.



## முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் - 2013

**தலைவர்**

திரு பிரசாத் கல்ஹேன

**உறுப்பினர்கள்**

திருமதி தாரா விஜேதிலக்க
செயலாளர்
விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு

திரு ஏ. அப்துல் மஜீட்
மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி)
உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண
சபைகள் அமைச்சு

திரு எம்.ஏ. தாஜுதீன்
மேலதிகச் செயலாளர்
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

திருமதி தனூஜா முருகேசன்
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

திரு ஏ.எல்.ஏ. அசோக சிறிவர்த்தன
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
கமத்தொழில் அமைச்சு

திரு விமல் ஜயவர்த்தன
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு

திரு என்.கே.ஜி.கே. நம்மேவத்த
மேலதிகச் செயலாளர் (NR)
சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி பற்றிய அமைச்சு

திரு யூ.பி. விக்ரமரத்ன
மேலதிகச் செயலாளர் (தொழில் நுட்பம்)
நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

திரு ஏ.டப்ளியூ.எம். சரத்சந்திர
பணிப்பாளர் (கருத்திட்டம், தொழில் நுட்பம்) போக்குவரத்து அமைச்சு

திரு தமித குமாரசிங்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

திரு அரோஸ் சந்தீப விஜேசிங்க
பி.நி.உ./தலைவர்
ஒம்னிப்ரொ இன்டஸ்ட்ரீஸ் (ப்ரைவட்) லிமிற்றட்

திரு ருவன் விராஜ் வைத்தியரத்ன
முகாமைப் பணிப்பாளர்
ஹேலீஸ் அட்வான்டிஸ் லிமிற்றட்

திரு அசோக அபேகுணவர்த்தன
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சக்தி மன்றம்

திரு சி. மஹேஸ் எதிரிசிங்க
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

திரு வினோத் சமரவிக்ரம
பணிப்பாளர் (விற்பனை)
எரிக்ஷன் ரெலிகொமினிகேஷன் லங்கா (ப்ரைவட்) லிமிற்றட்

திரு டீ.டீ. ஆனந்த நாமல்
தலைவர்
இலங்கை சக்தி முகாமையாளர்கள்

திரு ஜே.ஜி.எல்.எஸ். ஜயவர்த்தன
பணிப்பாளர்
மின்வலு சக்தி அமைச்சு

திரு எஸ்.எஸ். முதலிகே
பணிப்பாளர் (தேசிய திட்டமிடல் திணைக்களம்)
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

சங்கம்

திரு பாத்தியா ரணதுங்க
தலைவர் - சிறிய நீர்வலு உற்பத்தியாளர்கள் சங்கம்
இகோ பவர் (ப்ரைவட்) லிமிற்றட்

**கணக்காய்வுமற்றும்முகாமைத்துவக்குழுவின்உறுப்பினர்கள்விபரம் - 2013**

தலைவர்
**திருஎஸ்.எஸ்.முதலிகே**
பணிப்பாளர் (தேசியதிட்டமிடல்திணைக்களம்)
நிதிமற்றும்திட்டமிடல்அமைச்சு


உறுப்பினர்
**திருகாமினிகமகே**
மேலதிகச்செயலாளர்(சுற்றடால்மற்றும்கொள்கை)
சுற்றாடல்மற்றும்மீளப்புதுப்பிக்கத்தகுசக்திஅமைச்சு

உறுப்பினர்
**திருசுலக்ஷனஜயவர்த்தன**
பணிப்பாளர் (திட்டமிடல்மற்றும்மீளாய்வுக்கண்காணிப்பு)
மின்வலுசக்திஅமைச்சு

அவதானிப்பாளர்
**திருஆர்.எம்.ரத்நாயக்க**
கணக்காய்வுஅத்தியட்சகர்
கணக்காய்வாளர்தலைமைஅதிபதியின்திணைக்களம்

**எமதுபதவியணிவிபரம் - 2013**

ஒப்பீட்டளவில்எமதுஅதிகாரசபைபுதியஒருஇளம்நிறுவனமாகும்.இதில்மொத்தம்91 ஊழியர்கள்பணியாற்றுகின்றனர்.



**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச.) செயலாற்றுகை**

இலங்கையின் தேசிய சக்திக் கொள்கைகளும் திறமுறைகளும் தேசிய மற்றும் தனியாள் ஆகிய இரண்டு நோக்கங்களிலிருந்தும் வருகின்ற சக்திப் பாதுகாப்பை வலிமையாக வலியுறுத்துகின்றன. இந்தக் கொள்கை எல்லா நேரங்களிலும் சகல பிரஜைகளுக்கும் நம்பத்தகுந்த, சுமக்கக்கூடிய விலையில் தூய சக்தியைக் கிடைக்கச் செய்யும் ஒரு சூழலை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) அரசாங்கத்தின் முக்கிய நிறுவனமாகும். இது நாட்டில் அனைத்து வகையான மீளப்புதுப்பிக்கத்தகு சக்திகளின் அதிகளவில் பிரயோகிப்பதையும் நிலைபெறுதகு பாவனையையும் ஊக்குவிக்கின்றது. இலங்கையின் சக்தித் துறை தற்பொழுது குறிப்பாக அனல் சக்தி உற்பத்தி நிமித்தம் இறக்குமதி செய்யும் கனிய எண்ணெய்களில் அதிகளவு தங்கியிருக்கின்ற காரணத்தால் சுமக்கக்கூடிய விலையில் முழு நாட்டிற்கும் இடையறாத மின்சார விநியோகத்தை வழங்க முடியாமை மற்றும் கடுமையான பொருளாதாரத் தாக்கம் என்பன தொடர்பான பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. இந்த நிலையைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு அரசாங்கம் பின்வரும் திறமுறைகளைத் திட்டமிட்டுள்ளது.

- இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்களுக்குப் பிரதியீடாக 2020 ஆம் ஆண்டளவில் புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களைப் பயன்படுத்தி 20% க்றிட் மின்சார உற்பத்தி இலக்கை அடைதல்.
- சக்திப் பாதுகாப்பு அளவீட்டு முறைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக 2020 ஆம் ஆண்டளவில் மொத்த சக்தி நுகர்வில் 8.7% வீதத்தைக் குறைத்தல்.

**2013-2014 ஆம் ஆண்டுகளின் போது இந்தத் திறமுறைத் திட்டங்களை அடையும் நிமித்தம் இ.நி.வ.அ.ச. எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.**

**சுருக்கம்:**

- 217.685 மெ.வொ. புதிய மீளப்புதுப்பிக்கத்தகு மொத்த சக்தி உற்பத்திக் கொள்-திறனைக் கருத்திற்கொண்டு 93 எண்ணிக்கையான மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- ஓப்-க்றிட் மின்சார வசதி வழங்கல் தெரிவைப் பயன்படுத்தி கிராமிய மக்களுக்கு மின்சாரத்தை வழங்கும் நிமித்தம் 'லங்காகம' மற்றும் 'சுனித்தியாலோக்க' ஆகிய கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

- ஆ.அ.வ. வங்கி நிதியளித்த இரண்டு மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

  - தோட்டத் துறை சிறிய நீர்வலு புனரமைப்பு மீள்சக்தியூட்டல் முன்னோடிக் கருத்திட்டம்: கருத்திட்டத்தின் அபிவிருத்திப் பிரிவானது 1.3 மெ.வொ. அளவு க்றிட் மின்சாரத்தை வழங்குவதற்குரிய சுமார் 19 எண்ணிக்கையான சிறிய நீர்வலு கருத்திட்டங்களுடன் தொடர்புற்றிருக்கும்.

  - கூரையின் மேல் சூரிய சக்திப் பலகைகளை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முன்னோடிக் கருத்திட்டம்: கருத்திட்டத்தின் அபிவிருத்திப் பிரிவானது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை அண்மித்த தனியார் துறை சம்பந்தப்படும் கூரை மேல் சூரிய சக்தி பலகைகளை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உப கருத்திட்டங்களான (சுமார் 800 கி.வோ.) மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற மொரட்டுவை, பேராதெனிய, யாழ்ப்பாணம், ருஹுணு ஆகிய பல்கலைக்கழகங்களின் அத்தகைய கூரையின் மேல் சூரிய சக்திப் பலகைகளை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய உப கருத் திட்டங்களுடன் தொடர்புற்றிருக்கும்.

- கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத்திறன் சார்ந்த செயற்பாடுகளை செயற்படுத்தும் பயனாக 1,724 மெ.வொ.ம. சக்தி மீதமாகும்.

- எரிபொருள் சுவிட்சிங் முன்னெடுப்புகளினால் முக்கியமாக 60,223 லீற்றர் டீசலும், 7,376 லீற்றர் உலை எண்ணெய்யும் மீதமாகும்.

- அண்ணளவாக வருடாந்தம் 22 ஜி.வொ.ம. மின்சாரத்தை சேமிக்கும் சாத்தியத்தைக் கருத்திற்கொண்டு கூரை மின்விசிறி முத்திரையிடல் தொடர்பான ஒழுங்குவிதி 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

- கூரை மின்விசிறிகள் முத்திரையிடல் சோதனை ஆய்வுகூடம் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் தாபிக்கப்பட்டது.


**முன்னேற்றம் தொடர்பான சுருக்கம் (2013 சனவரி – 2013 திசம்பர்)**
***மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி***


**1 வளங்கள் ஒதுக்கீடும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளும்**

2007 இன் 35 ஆம் இலக்க இ.நி.வ.அ.ச. சட்டத்தின் மூலம் இந்த இ.நி.வ.அ.ச. நிருவகிக்கப்படுகின்றது. இது மீளப்புதுப்பிக்கத்தகு அனைத்து வகையான சக்திக் கருத்திட்டங்களுக்கான தற்காலிக அங்கீகாரங்களையும் (த.அ.) அதே நேரம் சக்தி அனுமதிப்பத்திரங்களையும் (ச.அ.) வழங்குகின்ற ஒழுங்குறுத்துகை சபையாகவும் விளங்குகின்றது.

✓ 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில்:

- புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களுக்கு (NRE) எழுபத்து ஒன்பது (79) தற்காலிக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கருத் திட்டங்களின் சக்திக் கொள்திறன் 168.845 மெ.வொ. ஆகும்.
- பதின்நாங்கு (14) கருத்திட்டங்களுக்கு சக்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன. இந்தக் கருத்திட்டங்களின் சக்திக் கொள்திறன் 48.84 மெ.வொ. ஆகும்.
- ஒட்டுமொத்த மேலதிக **NCRE** சக்திக் கொள்திறன் 351.59 மெ.வொ. ஆகும்.




*தரவுமூலம்: இலங்கை சக்திச் சமநிலை*

- ✓ இரு நூற்று தொண்ணூற்று எட்டு (298) NRE கருத்திட்டங்கள் சக்திக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற அல்லது உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப் பட்ட அல்லது முன்வைக்கப்பட்ட கருத்திட்டங்களுடன் முரண்பட்டிருந்தன. இந்தக் கருத்திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இ.நி.வ.அ.ச. சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை அனுசரித்துக் காணப்படவில்லை என்பதுடன் பூரணமான விண்ணப்பங்களாகக் காணப் படவுமில்லை. இதனால் இந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

இ.நி.வ.அ.ச. நேரடியான தலையீட்டைக் கொண்டு இந்துரான சிறிய நீர்வலு உற்பத்திப் பொறித்தொகுதி (60 கி.வொ.) மற்றும் அம்பாந்தோட்டை சூரிய சக்தி உற்பத்திப் பொறித்தொகுதி (1237 கி.வொ.) என்பன செயற்படுத்தப்படுகின்றன. இவை மீளப்புதுப்பிக்கத்தகு சக்தித் தொழில்நுட்பங்களின் செய்து காண்பிப்பு வசதிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

- ✓ **இ.நி.வ.அ.ச செயற்படுத்திய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி முன்னோடிக் கருத்திட்டங்கள்:**
  - 1,451,444 கி.வொ.ம. சூரிய சக்தி உற்பத்தி செய்யப்பட்டது
  - 188,929 கி.வொ.ம. நீர்வலு சக்தி உற்பத்தி செய்யப்பட்டது



*2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை திறந்துவைக்கப்பட்டது.*

## 2 மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் மதிப்பீடு

- ✓ நாட்டிலுள்ள மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் சாத்தியத்தின் மதிப்பீடு நிமித்தம் காற்று மற்றும் சூரிய சக்தி அளவீட்டு நிலையங்கள் தாபிக்கப் பட்டன. அத்தகைய அளவீடுகள் நீண்டகால அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டன.



சாம்பூர், சூரியகந்த, நுவரெலியா, கலமெட்டிய மற்றும் பலாங்கொட ஆகிய பிரதேசங்களில் பகிதாக நிறுவப்பட்ட காற்று அளவீட்டுக் கருவிசாதனங்கள்

நீர் முகாமைத்துவ முறைமைகள் மதிப்பீட்டின் நிமித்தம் மேலும் ஆய்வுகள் மற்கொள்ளப்பட்டன. MSW (மாநகரத் திண்மக் கழிவு) மற்றும் விவசாயத் திண்மக் ழிவு ஆகியன தொடர்பில் இரண்டு பிரேரணைகள் தயாரிக்கப் பட்டன. இந்தப் ரேரணைகள் தற்பொழுது மீளாய்வுக் கட்டத்திலுள்ளன.

## 3 கிராமிய சக்தி சேவைகள்

- ✓ ஓப்-க்றிட் மின்சாரமாக்கல் தெரிவைப் பயன்படுத்தி கிராமிய மக்களுக்கு மின்சாரத்தை வழங்கும் நிமித்தம் ‘லங்காகம - திரசாரகம்மான’ மற்றும் ‘சுனித்தியாலோக்க’ ஆகிய கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.



- ✓ ‘லங்காகம’ கருத்திட்டத்தின் கீழ், கிராம மக்களுக்கு 500 அடுப்புகளும் 300 மின்குமிழ்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. மின்சார நுகர்வோர் சங்கத்திற்கு (மி.நு.ச.) நான்கு இயக்கச்செயற்பாட்டு, பராமரிப்பு கருவிசாதனப் பொதிகள் வழங்கப்பட்டன. மின்பொறித்தொகுதி இயக்குநர்கள், குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக 25 பயிலுநர்களுக்கு இயக்கப் பராமரிப்பு மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.



*'லங்காகம கருத்திட்டத்தின்' கீழ் சமையல் அடுப்புகளும் கருவிசாதனப் பொதிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.*



- ✓ சலுகைக் கடன்களை வழங்கி தேறிய மாணிவாசிப்பு வசதியை மேம்படுத்த தேசிய அபிவிருத்தி வங்கியுடன் (தே.அ.வ.) புரிந்துணர்வு ஒப்பந்தம் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டது.
- ✓ மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அடிப்படையில் அனல் சக்திப் பிரயோகங்களை மேம்படுத்தும் வகையில் மாகாண சபைகளுக்கு எரிவாயு சார் சேவைகளை வழங்குவதற்கான ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

  கிராமிய சக்தி சேவைகள் தொடர்பில், ஊவா மாகாணத்தில் உள்ளூராட்சி அதிகார சபைகளின் தலைவர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப் பட்டன. மத்திய மாகாணத்திலுள்ள கருத்திட்ட இயக்குநர்களுக்கு கிராமிய நீர்வலு தொடர்பான ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

## 4 நன்கொடைத் தரப்புகள் நிதியளித்த கருத்திட்டங்கள்

- ✓ ஆ.அ.வ. நிதியளித்த இரண்டு மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.
- \- தோட்டத் துறை சிறிய நீர்வலு புனரமைப்பு மீள்சக்தியூட்டல் முன்னோடிக் கருத்திட்டம்: கருத்திட்டத்தின் அபிவிருத்திப் பிரிவானது 1.3 மெ.வொ. அளவு க்றிட் மின்சாரத்தை வழங்குவதற்குரிய சுமார் 19 எண்ணிக்கையான சிறிய நீர்வலு கருத்திட்டங்களுடன் தொடர்புற்றிருக்கும்.
- \- கூரையின் மேல் சூரிய சக்திப் பலகைகளை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முன்னோடிக் கருத்திட்டம்: கருத்திட்டத்தின் அபிவிருத்திப் பிரிவானது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை அண்மித்த தனியார் துறை சம்பந்தப்படும் கூரை மேல் சூரிய சக்தி பலகைகளை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உப கருத்திட்டங்களான (சுமார் 800 கி.வோ.) மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற மொரட்டுவை, பேராதெனிய, யாழ்ப்பாணம், ருஹுணு ஆகிய பல்கலைக்கழகங்களின் அத்தகைய கூரையின் மேல் சூரிய சக்திப் பலகைகளை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய உப கருத் திட்டங்களுடன் தொடர்புற்றிருக்கும்.

***சக்தி முகாமைத்துவம்***

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் சக்தி சேமிப்புகள் அடையப்பட்டன.

- ✓ கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத்திறன் சார்ந்த செயற்பாடுகளை செயற்படுத்தும் பயனாக 1,724 மெ.வொ.ம. சக்தி மீதமாகும்.
- ✓ எரிபொருள் சுவிட்சிங் முன்னெடுப்புகளினால் முக்கியமாக 60,223 லீற்றர் டீசலும், 7,376 லீற்றர் உலை எண்ணெய்யும் மீதமாகும். (மேற்குறித்த புள்ளி விபரங்கள் கைத்தொழில் தரப்புகளிடமிருந்து கிடைத்த பின்னூட்டல்களின் அடிப்படையிலுள்ளவை என்பதை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும். உண்மையான சேமிப்புகள் இதனைப் பார்க்கிலும் அதிகம்)

1 **சக்தி முகாமையாளர்/சக்தி மதிப்பாய்வாளர் நிகழ்ச்சித்திட்டம்**

சக்தி முகாமையாளர்/சக்தி மதிப்பாய்வாளர் தொடர்பான ஒழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் (2011.07.20 ஆம் திகதிய 1250/12 ஆம் இலக்க) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன. இந்த நிரலில்:

- ✓ இது வரை 178 சக்தி முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சக்தி முகாமையாளர்களை நியமிக்கும் பொருட்டு, தொகையாக மின்சாரத்தை நுகரும் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டன.
- ✓ சக்தி முகாமையாளர்களுக்கு 02 மாலை நேர விரிவுரைகளும், ஒரு 04 நாள் பயிற்சியும் நடத்தப்பட்டன.

சக்தி முகாமையாளர்கள் மற்றும் சக்தி மதிப்பாய்வாளர்கள் தொடாபான ஒழுங்கு விதிகள் சக்தி மதிப்பாய்வாளர்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்கும். அந்த அடிப்படையில் சக்தி முகாமைத்துவப் பிரிவு உத்தியோகபூர்வமாக அதிகாரம் அளிக்கப்பட்ட 6 சக்தி மதிப்பாய்வாளர்களை ஆரம்பத்தில் நியமித்துள்ளது. தாஜ் சமுத்ரா ஹோட்டலின் கிரிஸ்டெல் போbல் அறையில் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் திகதி சான்றிதழ் வழங்கும் வைபவம் நடத்தப்பட்டது.

- ✓ பியகம ஏற்றுமதிப் பொருட்கள் பதனிடும் வலயத்தில் நான்கு முதலீட்டு சபை (மு.ச.) தொழிற்சாலைகளில் செயல்முறைக் கருத்தரங்குகள் உட்பட 2013 ஆம் ஆண்டு யூன்/யூலை மாதக் காலப் பகுதிகளில் 2-வது சக்தி மதிப்பாய்வாளர் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.
- ✓ 6 சக்தி மதிப்பாய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர். 6 சக்தி மதிப்பாய்வாளர்கள் நியமனத்திற்காக மேலும் மீளாய்வசெய்யப்பட்டுள்ளனர்.



*2013 யூன்/யூலை மாத காலப் பகுதியில் நடத்தப்பட்ட சக்தி மதிப்பாய்வாளர் நிகழ்ச்சித்திட்ட நிறைவின் போது சான்றிதழ்கள் வமங்கப்பட்டன.*

- ✓ 356 ஹோட்டல்கள் சக்தி வினைத்திறன் செயற்பாடுகளைச் செயற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன (சுவிட் ஏசியா நிகழ்ச்சித்திட்டம் உட்பட).
- ✓ தேயிலைத் தோட்டப் பகுதிகளில் சக்தி வினைத்திறன் செயற்படுத்துகை நிகழ்ச்சித்திட்டங்களினூடாக மொத்தம் 930 மெ.வொ.ம. சக்தி சேமிக்கப் பட்டது.

**அரச துறை சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்**

- ✓ அரச துறைக் கைத்தொழில்களில் சக்தி முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இது வரை 194 சக்தி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் (ச.மு.உ.) நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ✓ ச.மு. உத்தியோகத்தர்களுக்கான சக்தி முகாமைத்துவம் பற்றிய வழிகாட்டி நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.
- ✓ தேசிய உற்பத்திச் செயலகத்துடன் இணைந்து இ.நி.வ.அ.ச. ஊவா, கிழக்கு மற்றும் வட மத்திய மகாணங்களில் அரச துறை ஊழியர்களுக்கு ‘உற்பத்தித் திறன் மேம்பாடு’ அறிமுக வேலையரங்குகளை நடத்தியுள்ளது.

**2 நியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துதல்**

- ✓ அண்ணளவாக வருடாந்தம் 22 ஜி.வொ.ம. மின்சாரத்தை சேமிக்கும் சாத்தியத்தைக் கருத்திற்கொண்டு கூரை மின்விசிறி முத்திரையிடல் தொடர்பான ஒழுங்குவிதி 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

- ✓ கூரை மின்விசிறி முத்திரையிடல் சோதனை ஆய்வுகூடம் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் தாபிக்கப்பட்டது.

- ✓ சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த மற்றும் மின்வலு சக்தி அமைச்சர் கௌரவ பவித்ரா வன்னி ஆராச்சி ஆகியோரின் பங்கேற்பில் 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதி தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ‘வதிவிடப் பிரயோகங்களுக்கான சக்தி வினைத்திறன் ஒளியேற்றல்’ தொடர்பான வழிகாட்டல் கைந்நூல்கள் பிரசுரிக்கப்பட்டன.

**3 ஆலோசனை மற்றும் உசாதுணை சார்ந்த சேவைகள்**

- ✓ சி.ந.தொ. முயற்சிகளுக்கு சக்தி மதிப்பாய்வாளர்களினூடான கால்நடைப் பயண நிகழ்ச்சித்திட்டத்தை பேர்க்கன்பீல்ட் ஜேர்மன் பல்கலைக்கழகத்தின் மூலப்பொருட்கள் ஒழுக்கு முகாமைத்துவ நிறுவகக் கூட்டொத்துழைப்பில் சி.ந.தொ. துறை முன்னெடுத்த சக்தியூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பாகமாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. சி.ந.தொ. பங்குபற்றுநர்கள் புவி அமைவிடத்தை அடிப்பபடையாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டது. இதன் முதலாம் கட்டம் கொழும்பு மற்றும் சுற்றுப்புற மாவட்டகளுக்காக 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 2013 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 03 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.

- ✓ சக்திப் பாவனையின் வினைத்திறன் நிமித்தம் உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம், கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம் மற்றும் இலங்கை நியமங்கள் நிறுவகம் ஆகிய நான்கு அரசாங்கக் கட்டிடங்கள் சக்தி மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

- ✓ 185 நடை பயண சக்தி மதிப்பாய்வுகள் (சுவிட் ஏசியா நிகழ்ச்சித்திட்டம் அடங்கலாக) மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மதிப்பாய்வுகள் அனல் சக்தி மற்றும் மின்சக்தி ஆகிய இரண்டு வகை சக்திகள் அடங்கலாக 14 கி.வொ.ம. சக்தியை சேமிப்பதற்குப் பங்களித்தன.

- ✓ சக்தி மதிப்பாய்வுக்கான கருவிசாதனங்கள் களஞ்சியகம் வினைத்திறன் வாய்ந்த ரீதியில் இயங்கியது. 486 கருவிசாதன நாட்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

**4 சாதனைகளுக்கான விருது வழங்கல்**

- ✓ 2013 ஆம் ஆண்டு விதுல்கா அங்குரார்ப்பண வைபவத்தை முன்னிட்டு சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சுடன் இணைந்து இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) ஏற்பாடு செய்திருந்த இலங்கைத் தேசிய சக்தி விருதுகள் வழங்கும் வைபவம் 2013 ஆம் ஆண்டு 12 ஆம் திகதி BMICH மண்டபத்தில் நடத்தப்பட்டது.



*SLNEEA விருது வழங்கல் விழா*

## *பொருளாதார விவகாரங்கள்*

- ✓ நிலைபெறுதகு சக்தி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் ஜப்பான் புதிய சக்தி அபிவிருத்தி நிறுவகத்தின் (NEDO) தொழில்நுட்ப உதவியைக் கொண்டு முன்னெடுக்கப்பட்டன.
- ✓ இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது வழங்கல், சக்தி மாநாடு மற்றும் சக்திக் கண்காட்சி முதலிய மூன்று அம்சங்களை உள்ளடக்கி 4-வது தடவையாக விதுல்கா வருடாந்த நிலைபெறுதகு வலு பற்றிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.




*விதுல்கா 2013 – கண்காட்சியம்*

- ✓ நிலைபெறுதகு அபிவிருத்திற்கான ‘புத்தாக்கத் தொழில்நுட்பங்கள்’ என்ற தலைப்பில் பேராதெனியப் பல்கலைக்கழகத்தினது பொறியியல் பீடத்தின் கூட்டொத்துழைப்பில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது.

- ✓ தேசிய தூய உற்பத்தி நிலையத்தின் கூட்டொத்துழைப்பில் சக்தியும் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தியும் என்ற தலைப்பில் சர்வதேச வேலையரங்கு ஒன்று நடத்தப்பட்டது.
- ✓ EDEX கண்காட்சியினூடாக உயர் கல்வி மட்டத்தில் மாணவர்களுக்கு மத்தியிலும் தேசத்திற்கு மகுடம் எனும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பொது மக்கள் மத்தியிலும் நிலைபெறுதகு சக்தி எண்ணக்கருக்கள் ஊக்குவிக்கப்பட்டன.
- ✓ பாடசாலை சக்திக் குழு நிகழ்ச்சித்திட்டத்தில் 40 பாடசாலைகள் கலந்து கொண்டன. மாணவர்கள் சக்திப் பாதுகாப்பு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி முதலியன தொடர்பான செயற்பாடுகளில் வெற்றிகரமாக ஈடுபட்டனர்.

# நிதி நிலைக் கூற்று



**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**
**2013 திசம்பர் 31 இற்கான ஐந்தொகைக் கணக்கு**

| | குறிப்பு | 2013 ரூ. | | 2012 ரூ. | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 3 | 1,227,936,857 | | 1,355,913,508 | |
| நிகழும் பணிகள் | 4 | 49,461,726 | | 7,551,235 | |
| முதலீடுகள் | 5 | 58,528,095 | 1,335,926,678 | 55,507,154 | 1,418,971,897 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| கிடைக்க வேண்டிய தொகை | 6 | 11,202,454 | | 12,449,801 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 7 | 15,678,223 | | 23,593,415 | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 8 | 269,792,827 | 296,673,504 | 159,958,726 | 196,001,942 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | 1,632,600,182 | | 1,614,973,839 |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | |
| **ஒபப்புரவு** | | | | | |
| திரண்ட நிதி | 9 | 22,100,336 | | 22,100,336 | |
| தேறிய மிகைகள் | | 10,228,291 | | (25,434,679) | |
| பிற்போடப்பட்ட மானியம் | 10 | 1,269,692,912 | | 1,356,059,136 | |
| இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை | 11 | 215,182,618 | | 142,222,496 | |
| நிலைபெறுதகு உத்தரவாத நிதியம் | | 66,528,095 | 1,583,732,252 | 63,507,154.00 | 1,558,454,443 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை | | 7,298,903 | 7,298,903 | 6,328,608 | 6,328,608 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| ஏனைய கொடுமதிகள் | 12 | 38,395,891 | | 47,058,212 | |
| குறுங்கால ஏற்பாடுகள் - கணக்காய்வுக் கட்டணங்கள் | | 1,022,636 | | 982,076 | |
| காணி சுவீகரித்தல் மீதான தேறிய வைப்பு | | 2,150,500 | 41,569,027 | 2,150,500 | 50,190,788 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | 1,632,600,182 | | 1,614,973,839 |

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்காகவும் அதன் சார்பாகவும்**

**பணிப்பாளர் (நிதி)** **பணிப்பாளர் நாயகம்** **தலைவர்**

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை
## 2013 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று

| | குறிப்பு | 2013<br>ரூ. | 2012<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| கருத்திட்டம் சார்ந்த செலவுகளுக்கான மூலதன மானியம் | 13 | 4,008,039 | 37,502,139 |
| கழித்த பிற்போடப்பட்ட மானியம் | 14 | 168,836,532 | 161,433,593 |
| நடைமுறை மானியம் | | 80,100,000 | 33,180,000 |
| ஏனைய வருமானம் | 15 | 100,906,982 | 98,848,394 |
| கழிக்குக:VAT | | (8,255,905) | |
| **மொத்த வருமானம்** | | **345,595,648** | **330,964,126** |
| **செலவினம்** | | | |
| கருத்திட்டம் சார்ந்த செலவுகள் | 16 | (45,268,770) | (62,473,123) |
| சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 17 | (52,373,903) | (48,391,942) |
| பிரயாண, வாழ்க்கைப்படிச் செலவுகள் | 18 | (2,216,937) | (1,416,843) |
| வழங்கல்கள் | 19 | (7,804,909) | (6,610,976) |
| பராமரிப்பு சார்ந்த செலவுகள் | 20 | (6,454,313) | (5,356,408) |
| ஒப்பந்தம் சார்ந்த செலவுகள் | 21 | (23,117,830) | (19,732,818) |
| தேய்மானம் சார்ந்த செலவுகள் | 22 | (168,836,532) | (161,433,114) |
| ஏனைய நடைமுறைச் செலவுகள் | 23 | (3,669,374) | (4,642,237) |
| **குறித்த ஆண்டிற்கான செலவுகள்** | | **(309,742,568)** | **(310,057,461)** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | (190,107) | - |
| **மிகைகள்/(துண்டுவிழுகைகள்)** | | **35,662,973** | **20,906,665** |

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**

**2013 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று**

| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| குறித்த ஆண்டிற்கான மிகைகள் | 35,853,079 | | 20,906,665 | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | (190,107) | | | |
| பணிக்கொடை நிதிக்கான மாற்றல்கள் | | | | |
| **பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:** | | | | |
| உத்தரவாத நிதியத்திற்கு மாற்றப்பட்ட தொகை | - | | | |
| கழித்த மானியம் (கிடைத்த நிதிகளுக்காக) | (168,836,532) | | (161,433,114) | |
| வட்டி வருமானம் | (3,409,193) | | (5,782,567) | |
| சேவைப் பணிக்கொடை ஏற்பாடு | 1,062,527 | | 860,127 | |
| தேய்மானம் | 168,836,532 | | 161,433,114 | |
| | 33,316,306 | | 15,984,225 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | 9,162,537 | | 20,170,207 | |
| நடைமுறைப் பொறுப்புக்களிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | (8,621,761) | | (3,453,603) | |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு | 33,857,082 | | 32,700,829 | |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசு | | 33,857,082 | | 32,700,829 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | (33,416,828) | | (12,630,337) | |
| நிகழும் பணிகள் | (8,757,199) | | (10,867,523) | |
| FD மற்றும் TBs ஆகியவற்றில் முதலிட்ட வட்டி/முதலீடுகள் | 388,252 | | 13,263,516 | |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்பட்ட தேறிய காசு | | (41,785,775) | | (10,234,344) |
| **நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| பிற்போடப்பட்ட மானியம் | 41,873,961 | | 23,497,382 | |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | 72,960,122 | | 45,366,862 | |
| திரண்ட நிதி | - | | | |
| நிலைபெறுதகு உத்தரவாத நிதியம் | 3,020,941 | | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | (92,231) | | (77,195) | |
| நிதியளித்தல் செயற்பாடுகளில் பயன்பட்ட தேறிய காசு | | 117,762,794 | | 68,787,049 |
| **காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு** | | 109,834,101 | | 91,253,534 |
| **குறித்த ஆண்டு ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்** | | 159,958,726 | | 68,705,192 |
| **குறித்த ஆண்டு இறுதியிலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்** | | 269,792,827 | | 159,958,726 |

-

5 தொடக்கம் 17 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

இறுதி

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை
## 2013 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

| தேய்மானம் | திரண்ட நிதி | தேறிய மிகை / துண்டுவிழுகை | பிற்போடப்பட்ட மானியம் | இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | நிலைபெறுதகு உத்தரவாத நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| **2012.12.31 இல் உள்ள நிலுவை** | **22,100,336** | **(25,434,679)** | **1,356,059,136** | **142,222,496** | **63,507,154** | **1,558,454,443** |
| 2012 இற்கான அதிகரிப்பு/குறைவு | - | 35,853,077 | (86,366,224) | 72,960,122.00 | 3,020,941 | **25,467,916** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | - | (190,107) | | | | **(190,107)** |
| **Balance as at 31.12.2013** | **22,100,336** | **10,228,291** | **1,269,692,912** | **215,182,618** | **66,528,095** | **1,583,732,252** |

5 தொடக்கம் 17 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

குறிப்பு 3 :

**சொத்துக்கள், பொறித்தொகுதிகள் , உபகரணங்கள்**

**நிலையான சொத்துக்கள்**

| தேய்மானம் | 2012.12.31 இற்கான நிலுவை | 2013 காலப் பகுதியிலுள்ள கொள்வனவு | 2013.12.31 இற்கான நிலுவை |
|---|---|---|---|
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 11,590,111 | 2,271,385 | 13,861,495 |
| மோட்டார் வானங்கள் | 45,811,750 | 204,800 | 46,016,550 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 1,963,791 | 1,030,400 | 2,994,191 |
| கணிகள் | 25,430,487 | 3,742,082 | 29,172,570 |
| மின்சாரப் பொருட்கள் | 218,468 | 61,792 | 280,260 |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | 453,352 | (0) | 453,352 |
| சக்தி உபகரணங்கள் | 76,887,347 | 3,182,088 | 80,069,435 |
| காற்றுக் கோபுரங்கள், உபகரணங்கள் | 28,644,898 | 16,970,253 | 45,615,151 |
| சூரிய சக்தி, சிறிய நீர்வலு கருத்திட்டங்கள்: | | - | |
| A. சூரிய சக்திப் பலகைகள் | 655,143,926 | 3,904,422 | 659,048,348 |
| B. இரும்புக் கட்டுமாணங்கள் | 222,261,738 | 0 | 222,261,738 |
| C. கட்டிடங்கள் | 123,667,779 | 3,391,838 | 127,059,617 |
| D. ஆளி நெம்பி | 13,973,767 | - | 13,973,767 |
| E. உட்திணி சாதனங்கள் | 78,637,410 | - | 78,637,410 |
| F. மின்மாற்றிகள் | 45,753,626 | - | 45,753,626 |
| G. மின்சார உபகரணங்கள் | 25,473,252 | 5,784,688 | 31,257,940 |
| I. துப்புரவேற்பாடு, குழாய் மார்க்கங்கள் | 166,360,476 | 113,424 | 166,473,900 |
| J. கேபெல்கள் | 100,224,571 | - | 100,224,571 |
| K. தளபாடப் பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள் | 2,964,429 | 50,155 | 3,014,584 |
| L. கருவிசாதனங்கள் | 13,977,290 | - | 13,977,290 |
| M. இயந்திராதிகள் | 4,001,375 | - | 4,001,375 |
| H. ஏனையவை | 59,891,677 | 147,987 | 60,039,664 |
| | | - | |
| கண்காட்சி உபகரணங்கள் | 354,853 | 0 | 354,853 |
| | **1,703,686,373** | **40,855,315** | **1,744,541,687** |

**தேய்மானக் கணக்கு**

| தேயய்மானம் | தேய்மான வீதம் % | 2012.12.31 இற்கான நிலுவை | 2013 இற்கான தேய்மானம் | 2013.12.31 இற்கான நிலுவை | 2013.12.31 இற்கான தேறிய புத்தகப் பெறுமானம் |
|---|---|---|---|---|---|
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 25 | 10,037,147 | 1,176,175 | 11,213,322 | 2,648,173 |
| மோட்டார் வாகனங்கள் | 20 | 39,937,573 | 5,741,771 | 45,679,344 | 337,206 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 25 | 1,370,979 | 1,598,473 | 2,969,452 | 24,739 |
| கணனிகள் | 33.33 | 17,406,918 | 3,054,716 | 20,461,634 | 8,710,935 |
| மின்சாரப் பொருட்கள் | 25 | 218,468 | 7,073 | 225,541 | 54,719 |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | 20 | 387,224 | 24,953 | 412,177 | 41,175 |
| சக்தி உபகரணங்கள் | 33.33 | 66,091,712 | 11,379,385 | 77,471,097 | 2,598,338 |
| காற்றுக் கோபுரங்கள், உபகரணங்கள் | 20 | 11,562,529 | 7,781,052 | 19,343,581 | 26,271,570 |
| சூரிய சக்தி, சிறிய நீர்வலு கருத்திட்டங்கள்: | | | | - | - |
| A. சூரிய சக்திப் பலகைள் | 5 | 49,811,143 | 32,944,499 | 82,755,642 | 576,292,706 |
| B. இரும்புக் கட்டுமாணங்கள் | 10 | 32,181,018 | 22,226,174 | 54,407,192 | 167,854,546 |
| C. கட்டிடங்கள் | 5 | 9,435,385 | 6,184,571 | 15,619,956 | 111,439,661 |
| D. ஆளி நெம்பி | 20 | 5,398,085 | 2,794,753 | 8,192,838 | 5,780,929 |
| E. உட்திணி சாதனங்கள் | 20 | 24,373,852 | 15,727,482 | 40,101,334 | 38,536,076 |
| F. மின்மாற்றிகள் | 5 | 3,373,096 | 2,287,681 | 5,660,777 | 40,092,849 |
| G. மின்சார உபகரணங்கள் | 33.33 | 10,612,689 | 9,330,832 | 19,943,521 | 11,314,419 |
| I. துப்புரவேற்பாடு, குழாய் மார்க்கங்கள் | 5 | 11,804,757 | 8,320,494 | 20,125,251 | 146,348,649 |
| J. கேபெல்கள் | 20 | 28,624,755 | 20,044,914 | 48,669,669 | 51,554,902 |
| K. தளபாடப் பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள் | 25 | 1,051,763 | 741,142 | 1,792,905 | 1,221,679 |
| L. கருவி சாதனங்கள் | 33.33 | 6,611,139 | 4,658,631 | 11,269,770 | 2,707,520 |
| M. இயந்திராதிகள் | 20 | 188,705 | 800,275 | 988,980 | 3,012,395 |
| H. ஏனையவை | 20 | 16,943,135 | 12,003,986 | 28,947,121 | 31,092,543 |
| | | | | - | - |
| கண்காட்சி உபகரணங்கள் | 25 | 350,791 | 7,500 | 353,725 | 1,128 |
| | | **347,772,865** | **168,836,532** | **516,604,830** | **1,227,936,857** |

**குறிப்பு 4 : நிகழும் பணிகள்**

| | 2013.12.31 | 2012.12.31 |
|---|---|---|
| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மதிப்பீடு | 2,377,000 | 2,377,000 |
| அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை | 4,332,591 | 3,517,591 |
| இந்துரான சிறிய நீர்வலு கருத்திட்டம் | 352,608 | 1,656,644 |
| பலாங்கொட காற்று சக்திக் கோபுரம் | - | - |
| குளிர்சாதனப் பெட்டிப் பரிசோதனை உபகர | 42,104,027 | |
| WIP புதிய திரைப்படத் தயாரிப்பு | 295,500 | |
| | 49,461,726 | 7,551,235 |

**குறிப்பு 5 : முதலீடுகள்**

நிலையான வைப்புகள் (பொரளை தேசிய சேமிப்பு வங்கியிலிடப்பட்ட வைப்புகள்)

| முதலீடு செய்த திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | வைப்புப் பதிவு இலக்கம் | 2013.12.31 இற்கான வைப்புகள் | 2012.12.31 இற்கான வைப்புகள் |
|---|---|---|---|---|---|
| 21.09.2011. | | | 2-0061-05-10246 | | - |
| 21.09.2011. | | | 2-0061-05-10238 | | - |
| 21.09.2011. | | | 2-0061-05-10220 | | - |
| 21.09.2011. | | | 2-0061-05-10360 | | - |
| 21.09.2011. | | | 2-0061-05-10394 | | - |
| 21.09.2011. | | | 2-0061-05-10467 | | - |
| 21.09.2011. | | | 2-0061-05-10459 | | |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10416 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10432 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10408 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10343 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10335 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10378 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10386 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10327 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10319 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10297 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10289 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-102262 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2014 | 10.5% | 2-0061-05-10254 | 1,200,000 | 1,200,000 |
| 25.09.2011. | 25.09.2014 | 10.5% | 2-0061-04-12376 | 450,000 | 450,000 |
| 05.10.2011. | 05.10.2014 | 10.0% | 2-0061-03-09834 | 2,800,000 | 2,800,000 |
| | | | | **18,850,000** | **18,850,000** |

மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தில் முதலிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள்

| முதலீடு செய்த திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | வைப்புப் பதிவு இலக்கம் | 2013.12.31 இற்கான வைப்புகள் | 2012.12.31 இற்கான வைப்புகள் |
|---|---|---|---|---|---|
| 18.01.2011. | 17.01.2014 | 10.85% | LKB00615C156 | 12,489,626 | 12,489,626 |
| 09.07.2011. | 11.07.2014 | 10.25% | LKB00314J011 | 27,188,469 | 24,167,528 |
| | | | | **39,678,095** | **36,657,154** |
| **மொத்தத் தொகை** | | | | **58,528,095** | **55,507,154** |

**குறிப்பு 6 - கிடைக்க வேண்டிய தொகைகள்**

நிலையான வைப்புக்கள் மீது கிடைக்க வேண்டிய வருமானம்

| முதலீடு செய்த திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | 2013.12.31 இற்கான வைப்புக்கள் | 2013 இற்குக் கிடைக்க வேண்டிய தொகை | 2012 இற்குக் கிடைக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 21.09.2011. | | | | | |
| 21.09.2011. | | | | | |
| 21.09.2011. | | | | | |
| 21.09.2011. | | | | | |
| 21.09.2011. | | | | | |
| 21.09.2011. | | | | | |
| 21.09.2011. | | | | | |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 21.09.2011. | 21.09.2013 | 10.5% | 1,200,000 | 33,000 | 43,275 |
| 25.09.2011. | 25.09.2013 | 10.0% | 450,000 | 11,875 | 16,228 |
| 05.10.2011. | 05.10.2013 | 10.0% | 2,800,000 | 66,111 | 100,975 |
| | | | 18,850,000 | 506,986 | 679,777 |

திறைசேரி உண்டியல்கள் மீது கிடைக்க வேண்டிய வட்டி வருமானம்

| முதலீடு செய்த திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | 2013.12.31 இற்கான வைப்புக்கள் | 2013 இற்குக் கிடைக்க வேண்டிய தொகை | 2012 இற்குக் கிடைக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|
| 18.01.2011. | 17.01.2013. | 10.85% | 12,489,626 | 1,309,954 | 1,050,908 |
| 09.07.2011. | 11.07.2013 | 10.25% | 27,188,469 | 1,315,997 | 1,448,396 |
| | | | 39,678,095 | 2,625,951 | 2,499,304 |

**சக்தி உபகரணங்களின் வாடகைகளிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம்**

| | 2013.12.31 | 2012.12.31 |
|---|---|---|
| பார்ன்டெஸ் பினிசிங் லிமிற்றட் - 2005 | 4,850 | 4,850 |
| BMI ஹோல்டிங் (ப்ரைவட்) லிமிற்றட் - 2005 | 7,200 | 7,200 |
| ஹேலீஸ் இன்டஸ்ட்ரியல் சொலூஷன்ஸ் - 2 | 500 | 500 |
| எனொர்பாப் (ப்ரைவட்) லிமிற்றட் - 2006 | 3,750 | 3,750 |
| எக்ஸெஸ் எனொர்ஜி சொலூஷன்ஸ் | 500 | 500 |
| எக்ஸெஸ் எனொர்ஜி சொலூஷன்ஸ் | 500 | 500 |
| ப்ரான்டிக்ஸ் | 2,650 | 2,650 |
| DIMO | 1,600 | 1,600 |
| எனொர்ஜி சோல்வ் இன்ட். | 5,750 | 5,750 |
| நெஷனல் க்லீனர் ப்ரொடக்ஷன் சென்டர் | 750 | 750 |
| MAS அக்டிவ் | 2,400 | 2,400 |
| என்ஜினியரிங் டிசைன் சென்டர் | 5,000 | 5,000 |
| க்லைட் (ப்ரைவட்) லிமிற்றட் | 150 | 150 |
| SLEMA | 250 | 250 |
| | 35,850 | 35,850 |
| கிடைக்க வேண்டிய விதுல்கா வருமானம் | 374,675 | 472,175 |
| இந்துரான மின்னுற்பத்திக் கருத்திட்டம் | - | 80,270 |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | | |
| அம்பாந்தோட்டை மின்னுற்பத்திக் கருத்திட்ட | 2,812,500 | 8,682,425 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | |
| கிடைக்க வேண்டிய ஊழியர்கள் | 2,138 | |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந் | 4,702,660 | |
| பீப்ல்ஸ் ட்ரவெல் ப்ரைவட் லிமிற்றட் | 95,550 | |
| | **8,023,373** | **9,270,720** |
| **மொத்தத் தொகை** | 11,202,454 | 12,449,801 |

| | 31.12.2013. | 31.12.2012. |
|---|---|---|
| **குறிப்பு 7: ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| **முற்பணங்கள்** | | |
| CFL கடன் | - | 194,673 |
| சக்தி நிதியத்திலிருந்து அதிகார சபை நிதிக்குக் கிடைக்க வேண்டிய தொகை | | 7,269,950 |
| அதிகார சபையின் நிதியத்திலிருந்து சக்தி நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதி | 7,444,270 | |
| மின்வலு சக்தி அமைச்சினால் கடனாகப் பெற்ற தொகை | | 8,000,000 |
| இ.மி.ச. சபையிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை | | |
| விழா முற்பணம் | | |
| மருத்துவக் காப்புறுதி | 500 | 500 |
| முற்பணக் கணக்கு | 98,500 | |
| தேசிய நீர் வளங்கள் சபை | | |
| முற்பண வைப்பு - எரிபொருள் முதலியன | 136,500 | 136,500 |
| விஷேட முற்பணம் | | |
| இடர் கடன் | | |
| அம்பாந்தோட்டை இ.மி.ச. வைப்பு | 52,000 | 52,000 |
| இந்துரான இ.மி.ச. வைப்பு | 62,500 | 62,500 |
| தொலைபேசிக்கான வைப்பு | 8,775 | 8,775 |
| தொலைபேசிக்கான வைப்பு - மொபிட்டெல் | 2,000 | |
| SWRDB தேசிய ஞாபகார்த்த நிதிய வைப்பு | 38,886 | 240,000 |
| ஊழியர்கள் உயர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 187,450 | 80,000 |
| நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முற்பணங்கள் | 137,333 | 161,185 |
| அம்பாந்தோட்டை விடுதி வாடகை - வைப்பு | 132,000 | |
| முற்பண வைப்பு- ஸ்ப்ரிங் வோட்டர் ப்ரைவட் லிமிற்றட் | 3,500 | |
| | **8,304,214** | **16,206,083** |
| **சுழற்சி நிதி** | | |
| இடர் கடன் | 7,288,521 | 7,314,344 |
| விஷேட முற்பணம் | 5,000 | 500 |
| விழா முற்பணம் | 80,489 | 72,489 |
| | **7,374,010** | **7,387,332** |
| | 15,678,223 | 23,593,415 |

| **குறிப்பு 8: காசும் காசு ஒப்புரவுகளும்** | | |
|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி - பொரளை | 207,151,805 | 149,942,180 |
| மக்கள் வங்கி-SEA-078-1-001-8-8-503576 | 12,387,146 | 5,798,073 |
| மக்கள் வங்கி-SEA-078-1-002-7-8-503576 | 4,578,684 | 3,082,245 |
| இலங்கை வங்கி - டொரிங்டன் - சுழற்சி நிதி | 1,463,745 | 1,136,228 |
| இலங்கை வங்கி - டொரிங்டன் - அதிகார சபை நிதி | 44,211,447 | |
| | **269,792,827** | **159,958,726** |

**குறிப்பு 9 : திரண்ட நிதி**

2007 செப்டம்பர் 30 ஆம் திகதியிலிருந்த சக்திப் பாதுகாப்பு நிதியத்தின் (ச.பா.நி.) திரண்ட நிதி 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு மாற்றப்பட்டது. இதில் பின்வருவன உள்ளடங்கியிருக்கும்.

| | | |
|---|---|---|
| 2007 செப்டம்பர் 30 ஆம் திகதியிலிருந்த திரண்ட நிதி | 7,076,392 | 61,244,579 |
| ஆரம்ப மூலதனம் | 5,000,000 | 5,000,000 |
| மின்வலு சக்தி அமைச்சின் மூலதன மானியம் | 5,761,145 | 5,761,145 |
| UNDP மூலதன மானியம் | 3,612,560 | 3,612,560 |
| உணவு விவசாய அமைப்பின் நன்கொடை மானியம் | 650,239 | 650,239 |
| நிலைபெறுதகு உத்தரவாத நிதியம் | | |
| மொத்தம் | 22,100,336 | 76,268,523 |

| | 2013 | 2012 |
|---|---|---|
| **குறிப்பு 10: பிற்போடப்பட்ட மானியம்** | | |
| மூலதன மானியம் - 2008 | 33,687,060 | 33,687,060 |
| மூலதன மானியம் - 2009 | 11,705,408 | 11,705,408 |
| வெளிநாட்டு மானியம் - 2009 - யப்பான் | 24,165,380 | 24,165,380 |
| மூலதன மானியம் - 2010 - அம்பாந்தோட்டை சூரிய ச.பேட்டை (WIP) | 46,693,991 | 46,693,991 |
| - கழிக்கப்படாத மூலதன மானியம் | 10,563,444 | 10,563,444 |
| வெளிநாட்டு மானியம் - 2010 - யப்பான் | 11,419,569 | 11,419,569 |
| மூலதன மானியம் - 2011- இந்துரான சிறிய நீர்வலு கருத்திட்டம் (WIP) | 15,523,945 | 15,523,945 |
| - கழிக்கப்படாத மூலதன மானியம் - இந்துரான கருத்திட்டம் | 68,548,216 | 68,548,216 |
| வெளிநாட்டு மானியம் - 2011 - யப்பான் | 1,155,016,402 | 1,155,016,402 |
| - கொரியா | 191,097,075 | 191,097,075 |
| பிற்போடப்பட்ட மானியம் - வெளிநாட்டு உதவி - 2012 - ஆ.அ.வ. | 15,082,346 | 15,082,346 |
| திறைசேரி மூலதன மானியம் - 2012 | 23,497,861 | 23,497,861 |
| பிற்போடப்பட்ட மானியம் - ஆ.அ.வ. - 2013 | 40,560,683 | |
| பிற்போடப்பட்ட மானியம் - KOIKA - 2013 | 35,662 | |
| திறைசேரி மூலதன மானியம்/FARDF - 2013 | 41,873,961 | |
| கழிக்குக: | | |
| -தேய்மானம்-2013 | (168,836,532) | |
| -தேய்மானம்-2012 | (161,433,593) | (161,433,593) |
| -தேய்மானம்-2011 | (63,289,946) | (63,289,946) |
| -முன்னைய ஆண்டுகளுக்கான தேய்மானம் | (26,218,020) | (26,218,020) |
| | **1,269,692,912** | **1,356,059,138** |

**குறிப்பு 11:**

**இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| RE வருமானம் | 193,172,615 | 130,426,630 |
| உபகரணங்கள் வாடகை, சக்தி மதிப்பாய்வு | 12,284,781 | 10,769,803 |
| சேமிப்புக் கணக்கு மீதான வட்டி - தே.சே.வ. | 15,725,222 | 7,026,063 |
| வெகுஜன ஊடக நிகழ்ச்சித்திட்டங்களினூடான விழிப்புணர்வுகளுக்காக மீளப்பெற்ற | (6,000,000) | (6,000,000) |
| | **215,182,618** | **142,222,496** |

**குறிப்பு 12: ஏனைய கொடுமதிகள்**

| | 2013 | 2012 |
|---|---|---|
| நிலைபெறுதகு சக்தி நிதியம் | 7,444,270 | |
| அதிகார சபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை | | 7,269,950 |
| நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியம் | - | |
| சுவிட் ஏசியா கட்டுப்பாட்டுக் கணக்கு | 4,548,176 | 3,051,737 |
| மின்வலு சக்தி அமைச்சு | 500 | 500 |
| அட்டுறு செலவுகள் | 23,208,177 | 29,294,019 |
| ***கடன்கள்*** | | |
| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி -E நெட் சொலூஷன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 1,667,500 | 1,667,500 |
| சக்தி உபகரணங்கள் கொள்வனவு | | |
| - E-நெட் சொலூஷன் (ப்ரைவட்) லிமிற்றட் | 326,025 | 326,025 |
| பிடித்துவைத்தல் தொகை | 519,392 | 3,634,360 |
| பிடித்துவைத்தல் தொகை | - | |
| நாரஹேன்பிட்ட தேசிய சந்தை | 99,405 | 99,405 |
| ***நானாவிதக் கடன்கள்*** | | |
| இலங்கை சுங்கத் திணைக்களம் | 310,748 | 310,748 |
| நலன்புரிச் சங்கம் - SEA | 442 | 442 |
| செலுத்த வேண்டிய நானாவிதத் தொகைகள் | | 984,269 |
| ***மீளளிக்கத்தகு வைப்புக்கள்:*** | | |
| E-நெட் சொலூஷன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 10,000 | 10,000 |
| ENL கன்ஷல்டென்ட் | 150,000 | 150,000 |
| E-நெட் சொலூஷன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | | |
| சிக்மா ரெக்னொலஜீஸ் | 10,000 | 10,000 |
| ரெங்கோ ரினீவபெல் எனெர்ஜி கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் | 30,000 | 30,000 |
| காமினி சேனாநாயக்க | | - |
| *Accruals* | | |
| O vertime | | |
| Travelling | | |
| Office Rent | | |
| Telecom Pvt Ltd | | |
| Mobitel Pvt Ltd | | |
| விதுல்கா கண்காட்சி | 9,256 | 9,256 |
| வாகனங்கள் அகற்றலுக்கான கேள்வி விலை மனுக்கள் அழைத்தல் | 8,000 | 156,000 |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 54,000 | 54,000 |
| | **38,395,891** | **47,058,212** |

| | 31.12.2013. | 31.12.2012. |
|---|---|---|
| **குறிப்பு 13 : கருத்திட்டச் செலவுகளுக்கான மூலதன மானியம்** | | |
| திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம் | 43,600,000 | 61,000,000 |
| நி.பி.கு.295 (1) இன் கீழுள்ள மாற்றல் கொடுப்பனவுகள் | - | |
| FASRDF -2013 | 2,282,000 | |
| கழிக்குக: | | |
| அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை | - | - |
| நிகழும் பணி | 8,457,133 | 10,867,523 |
| நடைமுறை ஆண்டின் போது சுவீகரிக்கப்பட்ட மூலதனச் சொத்துக்கள் | 33,416,828 | 12,630,338 |
| | **4,008,039** | **37,502,139** |
| **குறிப்பு 14 : கழித்து பிற்போடப்பட்ட மானியம்** | | |
| நடைமுறை ஆண்டிற்கான தேய்மானம் | 168,836,532 | 161,433,593 |
| முன்னைய ஆண்டிற்கான தேய்மானம் | | |
| | **168,836,532** | **161,433,593** |
| **குறிப்பு 15 : ஏனைய வருமானம்** | | |
| சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 39,075,970 | **30,269,950** |
| நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 3,409,193 | 5,782,567 |
| சார்க் (SAARC) சக்தி நிலையம் | | 528,917 |
| இடர் கடன் வட்டி | 296,166 | 294,114 |
| விஷேட முற்பணம் மீதான வட்டி | 2,953 | 2,293 |
| அம்பாந்தோட்டை மின்னுற்பத்தி நிலைய வருமானம் | 32,700,680 | 37,278,565 |
| இந்துரான மின்னுற்பத்தி நிலைய வருமானம் | 2,403,238 | 80,270 |
| விதுல்கா கண்காட்சி (அனுசரணை) | 2,750,000 | 9,707,415 |
| விதுல்கா கண்காட்சி (காட்சிக் கொட்டகைகள்) | 2,925,801 | |
| சுவிட் ஏசியா நிகழ்ச்சித்திட்டம் | | - |
| சக்தி முகாமையாளர் உத்தரவு சான்றிதழ் | 2,509,200 | 1,639,300 |
| ஏனைய வருமானம் | 2,628,936 | 269,692 |
| சக்தி நிதிய வருமானம் | | 6,000,000 |
| ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் | 16,200 | 6,995,311 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | |
| பெ.சே.வ. வரிக்காக சக்தி நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட தொகை | 3,932,740 | |
| வரி விதிக்கத்தக்க வருமானம் மீதான பெறுமதி சேர்ந்த வரி | 8,255,905 | |
| | **100,906,982** | **98,848,394** |

**குறிப்பு 16 : கருத்திட்டச் செலவுகள்**

**மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி**

| | | |
|---|---|---|
| மிகை காற்று சக்தி சாத்திய பரிவர்த்தனைப் பிரயோகத்திலிருந்து வரும் நீர்வலு | | |
| மின்சார வாகனத் தொழில்நுட்ப அபிவிருத்தி | 12,990 | 680 |
| சந்தைக் கழிவுகள் செய்துகாண்பிப்பு கருத்திட்டத்தின் உயிர் எரிவாயு | 294,899 | 5,738 |
| உயிர் எரிபொருள் நியமங்கள் தயாரித்தல் | | |
| வினைத்திறன் வாய்ந்த விறகு அடுப்புகள் விளம்பரம் | | 228,285 |
| இலங்கையில் கட்டிட மச்சுக்குப் பொருத்தமான சிறியளவு WECS | | |
| தரவுகள் வியாபாரத்திற்கு பொருத்தமான பொறிமுறைத்திட்டத்தை | | |
| CDM ஆவணங்கள் தயாரிப்பில் தனியார் துறைக்கு உதவுதல் | | |

| | 31.12.2013. | 31.12.2012. |
|---|---|---|
| ஏற்கெனவேயிருக்கின்ற வரலாற்று ரீதியான காற்று அளவீட்டு நிலையங்களைத் தழுவி முழுமையான ஒரு காற்றுத் தரவுத் தளத்தைத் தயாரித்தல் | | |
| ஒவ்வொரு வள வகைக்குமான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள வரைபடங்களைத் தயாரித்து, மதிப்பிடப்பட்ட RE சாத்தியம் பற்றி அறிக்கையிடுதல் I | 402,231 | 1,460,244 |
| ஆகக்கூடிய RE ஊடுருவல் அளவை நிர்ணயித்தல் | | |
| சக்திக் கைத்தொழில்களை ஊக்குவித்து 1 உயிரணுத்திணிவுச் சக்தி வலயத்தைத் தாபித்தல் | | 1,165 |
| இலங்கையின் வட பகுதி அடங்கலாக கோபுர செய்மதிகளுடன் சம்பந்தப்பட்ட இலங்கையில் தேர்ந்தெடுத்த இடங்களில் 10 நீண்டகால காற்று/சூரிய சக்தி அளவீட்டு நிலையங்களையும் மேலும் 03 மேலதிகமான அத்தகைய நிலையங்களையும் தாபித்து, அலை சக்தி அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் | | |
| இலங்கையின் வட பகுதியில் 03 காற்று அளவீட்டு நிலையங்களைத் தாபித்தல் மற்றும் 10 நீண்டகல காற்று/சூரிய சக்தி அளவீட்டு நிலையங்களைத் தாபித்தல், அலை சக்தி வள மதிப்பீட்டை முன்னெடுத்தல் | 1,437,640 | 414,647 |
| குறித்த ஒரு வள ஸ்தலத்தின் சாத்தியத்தை முழுமையாகப் பயன்படுத்தும் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்கள் | | 15,755 |
| சூரிய சக்தி மின்னுற்பத்தியுடன் இணைந்த க்றிட் மின்சார முறைமைக்கான முழுமையான வசதிகளையுடைய ஒரு சக்திப் பேட்டையைத் தாபித்தல் | 8,290,344 | 7,102,263 |
| 100 மெ.வொ. காற்றுமூல சக்திப் பண்ணையுடன் இணைந்த க்றிட் மின்சார முறைமைக்கான முழுமையான வசதிகளையுடைய ஒரு சக்திப் பேட்டையைத் தாபித்தல் | 900 | 150,580 |
| ஜனாதிபதி சிறப்புப் படையணியின் அறிக்கையில் விவரிக்கப்பட்டவாறு கருத்திட்டத்தின் அங்கீகார நடபடிக்கையின் நிமித்தம் ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்ட புதிய முறையியலை சீராக்குதல் | 126,000 | 67,256 |
| NCRE கைத்தொழில் அபிவிருத்தியை ஒரு தேசிய முன்னுரிமையாக மேம்படுத்தும் வகையில் ஏனைய உரிய நிறுவனங்களை ஊக்கப்படுத்துதல் | 243,997 | |
| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் ஒதுக்கீடு | 652,056 | |
| சக்தித் துறை முதலீட்டு ஊக்குவிப்பு (தனியார்) துறை வசதி | 1,268,635 | |
| NCRE கைத்தொழில் அபிவிருத்தியை ஒரு தேசிய முன்னுரிமையாக மேம்படுத்தும் வகையில் ஏனைய உரிய நிறுவனங்களை ஊக்கப்படுத்துதல் | | 933,034 |
| காணி விடயங்கள் சம்பந்தமான சேவைகளை வழங்கும் பொருட்டு நி.வ.அ.ச. ஒரு ஆரம்பத் தொடர்பைத் தாபித்தல் | | 489,092 |
| கருத்திட்டத்தின் அங்கீகாரம் சம்பந்தமான தீர்மானம் | | |
| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் ஒதுக்கீடு | | 1,031,084 |
| பிணக்குகள் தீர்த்தல் | | |
| RE கருத்திட்டங்களின் சக்தித் துறை முதலீட்டு ஊக்குவிப்பு | | |
| சக்தித் துறை முதலீட்டு ஊக்குவிப்பு (தனியார் துறை வசதி) | | 186,623 |
| GIS நாடுகளிலுள்ள நீர்வலுவில் காணப்படும் முழுமையான பொருளாதார சாத்தியத்தை உணர்த்துதல் | | 8,925 |
| ஓப்-க்றிட் மின்பிறப்பாக்கிகளின் தொழில்நுட்ப நியமங்களை நெறிப்படுத்துதல் | | |
| ஓப்-க்றிட் மின்சார முறைமைக்கான பராமரிப்புத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | | |
| ஓப்-க்றிட் பிரயோகங்களுக்கான சாத்திய விடயங்களையும் அத்தகைய பிரிவுகளுக்குக் கிடைக்கக்கூடிய வளத் தெரிவுகளையும் இனங்காணுதல் | | |
| ஓப்-க்றிட் மின்சாரமாக்கல் தெரிவைப் பயன்படுத்தி 10 கிராமங்களுக்கு மின்சார வசதிகளை அளித்தல் | 1,383,733 | 6,545,905 |
| தேர்ந்தெடுத்த இடங்களிலுள்ள RE கருத்திட்டங்களின் நிறுவுகைக்குப் பிற்பட்ட தாக்க மதிப்பீடும் முன்னேற்றக் கண்காணிப்பும் | 32,256 | 7,990 |
| இலங்கைச் சக்திச் சமநிலை | 1,407,068 | 1,554,677 |
| நிலைபெறுதகு சக்தித் துறைத் துணைக் கருத்திட்டங்கள் | 270,008 | |
| ஏனைய கருத்திட்டங்கள் | 71,110 | |
| | 15,893,866 | 20,203,943 |
| **சக்தி முகாமைத்துவம்** | | |
| முறையான சக்தி முகாமைத்துவத்திற்கான அளவீடுகள் தொகையாக மின்சாரத்தை நுகர்கின்ற நிறுவனங்களிலுள்ள அணுகுமுறைகள் | | 1,554,199 |
| சக்தி முத்திரையிடல் நிகழ்ச்சித்திட்டம் | | 207,661 |
| ஆய்வுகூட வசதிகள் தாபிப்பு (ஆ.அ.வ. உதவியின் ஊடாக) | | |
| குறியீட்டை ந.அ.அ.ச. அங்கீகார நடபடிமுறையில் கூட்டிணைத்தல், கைந்நூல்களுக்கான குறிப்புகளை இடுதல் மற்றும் குறியீடுகளை மீளாய்வுசெய்தல் | | 19,800 |
| மோட்டார் சோதனை வசதிகளின் தாபிப்பு | | 250,700 |
| குறித்த துறை நிகழ்ச்சித்திட்டங்கள் | | 57,965 |

| | 31.12.2013. | 31.12.2012. |
|---|---|---|
| E2 சொப் தாபிப்பு | | |
| E2 வலயங்கள் தாபிப்பு | | |
| வீதி வளக்குக் குறியீடு | | |
| கருவிகள் களஞ்சியகம் | | 63,170 |
| அரச துறை நிறுவனங்களில் சக்தி மதிப்பாய்வு | | 31,514 |
| ESCO களை வலுப்படுத்துதல் | | 671,904 |
| சக்தி வினைத்திறன் மேம்பாட்டு வசதிகள் | | |
| கொள்கை வழிகாட்டிகளின் அறிமுகம் | | |
| போக்குவரத்து சக்திக் கொள்கையை/எரிபொருள் சிக்கன நியமங்களைத் தயாரித்தல் | | 57,510 |
| ஊடகங்களினூடான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 5,325,141 |
| விதுல்கா சக்தி வாரம் | | 9,554,421 |
| தேசத்திற்கு மகுடம் எனும் நிகழ்ச்சித்திட்டம் | | 2,267,449 |
| அச்சீடும் வெளியீடுகளும் | | 3,533,181 |
| இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது | | 3,767,879 |
| பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்குமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | | 2,434,820 |
| துணை உற்பத்தி அறிமுகம் | | |
| இணையத்தளங்களின் பராமரிப்பு | | 74,361 |
| அளவீட்டு நியமக் குறியீடுகள் தாபிப்பு | | 482,000 |
| மூ-வகை உற்பத்தி அனல் சக்திக் களஞ்சியம் பற்றிய ஆய்வும் உபகரணங்களின் அடிப்படையிலான தரவுத் தளத் தாபிப்பும் | | 1,120 |
| E2 சொப் தாபிப்பு | | 67,012 |
| E2 வலயங்கள் தாபிப்பு | | 889 |
| காற்றுமூல சக்திச் சாதனங்களின் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | | 124,856 |
| ஒளியேற்றலுக்கான பிரந்திய நிலையம் | | 11,721,628 |
| சக்தி முகாமைத்துவக் குழு வட்டங்களைத் தாபித்தல் | 1,599,685 | |
| நியமங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் அறிமுகம் | 2,399,567 | |
| ஆலோசனை மற்றும் உசாதுணை சார்ந்த சேவைகள் வழங்கல் | 442,164 | |
| சாதனைகளுக்கான விருது வழங்கல் | 983,021 | |
| ISO 5001 ஐ ஊக்குவித்தல் | 67,000 | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளல் | 1,392,418 | |
| எதிர்காலத்திற்கான முன்னோடிக் கருத்திட்டங்களை மீண்டும் தாபித்தல் | 10,575 | |
| சந்தை அடிப்படையிலான கருவிசாதனங்களை அறிமுகப்படுத்துதல் | - | |
| பாதுகாப்புக்கான நிதிகள் | - | |
| | 6,894,429 | 42,269,180 |
| **அறிவு முகாமைத்துவம்** | | |
| விதுல்கா சக்திக் கண்காட்சி | 6,096,665 | |
| சக்தி மாநாடு | 150,987 | |
| இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது | 4,000,000 | |
| நிகழ்வு தரப்படுத்தல் | 5,227,809 | |
| இலத்திரனியல், அச்சீட்டு ஊடக மூல விழிப்புணர்வு | 1,186,055 | |
| பாடசாலை மாணவர்களுக்கான கல்வி விழிப்புணர்வு | 1,663,694 | |
| அரச, கூட்டுறவுத் துறைகளுக்கான கல்வி விழிப்புணர்வு | 335,809 | |
| பொதுமக்களுக்கான கல்வி விழிப்புணர்வு | 2,542,808 | |
| கல்வி ஊக்குவிப்பு சாதனங்கள் அபிவிருத்தி | 989,267 | |
| உயிர் எரிவாயு உற்பத்தி | 286,691 | |
| ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 690 | |
| | 22,480,475 | |
| | **45,268,770** | **62,473,123** |

**மீண்டெழும் செலவுகள்**

**குறிப்பு 17 : சம்பளங்களும் கொடுப்பனவுகளும்**

| | | |
|---|---|---|
| ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 29,666,211 | 33,474,859 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 7,183,345 | 5,986,013 |
| ஊழியர்களுக்கான ஏனைய கொடுப்பனவுகள் | 4,410,459 | |
| 12% ஊ.சே.நி. | 4,631,189 | 4,233,838 |
| 3 % ஊ.ந.நி. | 1,192,542 | 1,047,061 |
| மேலதிகநேர, விடுமுறை நாட் கொடுப்பனவு | 3,188,743 | 2,790,044 |
| பணிக்கொடை | 1,062,527 | 860,127 |
| நஷ்டஈட்டுக் கொடுப்பனவு | | |
| பயன்படுத்தாத லீவுக்கான காசு | 1,038,886 | |
| | **52,373,903** | **48,391,942** |

| | 31.12.2013. | 31.12.2012. |
|---|---|---|
| **குறிப்பு18 : பிரயாண, வாழ்க்கைப்படிச் செலவுகள்** | | |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவு | 765,651 | 864,889 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவு | 1,451,286 | 551,955 |
| | **2,216,937** | **1,416,843** |
| **குறிப்பு19 : மிகைகள்** | | |
| அச்சீடு, காகிதாதி, அலுவலகப் பொருட்கள் | 2,483,958 | 2,247,951 |
| எரிபொருளும் உராய்வுநீக்கிகளும் | 5,197,124 | 4,279,789 |
| ஏனையவை - செய்திப்பத்திரிகைகள், நானாவித சேவைகள் | 123,827 | 83,236 |
| | **7,804,909** | **6,610,976** |
| **குறிப்பு 20 : பராமரிப்புச் செலவுகள்** | | |
| வாகனங்கள் பராமரிப்பு, காப்புறுதி, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,879,835 | 5,027,580 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 574,478 | 328,828 |
| | **6,454,313** | **5,356,408** |
| **குறிப்பு 21 : ஒப்பந்தம் சார்ந்த சேவைகள்** | | |
| அலுவலக வாடகைகளும் வாடகைக் கட்டணங்களும் | 19,896,097 | 17,467,060 |
| தபால், தொலைத்தொடர்புகள் சார் கட்டணங்கள் | 2,402,832 | 1,858,127 |
| போக்குவரத்து | 218,901 | 57,630 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 600,000 | 350,000 |
| | **23,117,830** | **19,732,818** |
| **குறிப்பு 22: தேய்மானம் சார்ந்த செலவுகள்** | | |
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 1,176,175 | 1,406,196 |
| மோட்டார் வாகனங்கள் | 5,741,771 | 7,236,969 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 1,598,473 | 312,465 |
| கணனிகள் | 3,054,716 | 3,140,658 |
| மின்சாரப் பொருட்கள் | 7,073 | 683 |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | 24,953 | 28,413 |
| சக்தி உபகரணங்கள் | 11,379,385 | 10,380,701 |
| ககாற்றுக் கோபுரங்கள், உபகரணங்கள் | 7,781,052 | 5,446,151 |
| அம்பாந்தோட்டை சக்திப் பேட்டை | 138,065,434 | 133,466,606 |
| கண்காட்சி உபகரணங்கள் | 7,500 | 14,272 |
| | **168,836,532** | **161,433,114** |
| **குறிப்பு 23 : ஏனைய மீண்டெழும் செலவுகள்** | | |
| அலுவலக, ஏனைய நானாவிதமான செலவுகள் | 988,577 | 3,036,643 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 46,486 | 65,406 |
| சபை உறுப்பினர்களுக்கான முற்பணம் | 452,000 | 718,000 |
| உபசார செலவுகள் | 886,708 | 339,630 |
| உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 514,702 | 482,558 |
| வங்கிக் கட்டணங்கள் | 2,307 | |
| விதுல்கா மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு | 469,237 | |
| தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி (தே.க.வ.) | 309,356 | |
| | **3,669,374** | **4,642,237** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. — ஏஎச்/ஐ/எஸ்எல்எஸ்ஈஏ/2013 | ඔබේ අංකය / உமது இல. / Your No. — | දිනය / திகதி / Date — 2015 மே 15 |

தலைவர்,
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 2007 இன் 35 ஆம் இலக்கஇலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 50 ஏக்கர் விஸ்தீரணமுடைய காணி மற்றும் அம்பாந்தோட்டை சூரிய வெளிச்சப் பூங்கா செயற்திட்டத்திற்காக அதில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மதிப்பீடுசெய்யப்பட்டு மீளாய்வாண்டிலும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாக சேதமடைந்திருந்த காத்தாடி கோபுரம் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன் இதன்விளைவாக, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 2,377,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அம்பாந்தோட்டை மின்சாரம் உருவாக்கத்திலிருந்தான வருமானம் ரூபா 36,355,017 ஆக இருந்தது. எவ்வாறாயினும், விற்பனைப் பட்டியலின் பிரகாரம், இது ரூபா 44,153,180 ஆக இருந்தது. ஆதலால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் பெறவேண்டியவைகள் ரூபா 7,798,163 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளக்குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு

நியமங்கள் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளின் மாற்றங்கள் என்பவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள முறையே ரூபா 15,872,896 மற்றும் ரூபா 37,698,530 தொகையான பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்கள் அழைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அந்த மீதிகளின் சரியான தன்மையினையும் நம்பகத் தன்மையினையும் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலைக்கும் இடையில் ரூபா 13,624,445 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிலைபெறுதகு வலு நிதியம் மற்றும் நிலைபேறான வலு உத்தரவாத நிதியத்தின் உரிய முதலீடுகளுடன் சமப்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த இரண்டு தொகைகளுக்கும் இடையே முறையே ரூபா 8,030,813 மற்றும் ரூபா 8,000,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 8(1) ஆம் பிரிவு | 2012 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த 2013 |

| | |
|---|---|
| | ஆண்டிற்கான அதிகாரசபையின் பாதீடு 2013 சனவரி 16 இலேயே அனுமதிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 14(1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் வருடாந்த வரைவு அறிக்கை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரி சுற்றறிக்கைகள் | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள்களிற்கான பதிவோன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 396 | ரூபா 459,910 பெறுமதியான நிலுவையாகவிருக்கின்ற காசோலைகளில் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 20,906,665 நேரொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 44,490,201 மிகையொன்றை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 23,583,536 முன்னேற்றத்தை காண்பித்தது. மின்சார உருவாக்கலிருந்தான (இந்துரன) அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வருமானம் ரூபா 51,503,137 ஆல் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

#### 3.2.1 மூன்று மாதிரி மின்சார வாகனங்களை அபிவிருத்தி செய்தல்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, 2007 செப்தெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து 18 மாதங்களிற்குள் மூன்று மாதிரி மின்சார வாகனங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7.888 மில்லியன் அல்லது உடன்பட்ட விலையின் 87.66 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. முறைப்படியான கால நீடிப்புச் செய்யப்படாது செயற்திட்டக் காலம் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் தாமதமடைந்திருந்த போதிலும், கணக்காய்வு பரிசோதனைத் திகதியான 2014 மே மாதம் வரை ஒரு வாகனத்தையேனும் பூரணப்படுத்துவதற்கு அபிவிருத்தியாளர் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 3.2.2 பத்து காற்று அளவீட்டு கம்பங்களை வழங்கி, நிர்மாணித்து, பொருத்தி, வடிவமைத்தல்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் பின்வரும் நிலைகள் 2014 மே மாதம் இறுதிவரையும் மாற்றமடையாதிருந்தது.

(அ) காற்று அளவீட்டுக் கம்பங்களின் தரவுச் சேகரித்தலின் பௌதீக செயலாற்றல் ஏறத்தாழ 51 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆகவே அதிகாரசபையின் காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபித்ததிலிருந்து அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபிப்பதற்கான இடங்களை இனங்காணல், காற்றுத் அளவீட்டுத் தரவு சேகரித்தல் மற்றும் தரவுகளை அறிவித்தல் போன்ற குறிக்கோள்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(இ) வேண்டப்பட்ட நியமத்தில் கோபுரம் பொருத்தப்படாமை காரணமாக ரூபா 2,377,000 தொகையான நடுகுடாவில் கோபுரத்தை பொருத்துவதற்கு ஏற்பட்ட கிரயம் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 3.2.3 சுவிச் - ஆசிய நிகழ்ச்சித்திட்டம்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, சுவிச் ஆசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 7,334,354 தொகையிலிருந்து ரூபா 3,135,202 தொகை 1994 யூன் 04 ஆந் திகதி 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தொழில்சார் படியாக அதிகாரசபையின் சகல உத்தியோகத்தர்களிற்கும் செலுத்தப்பட்டிருந்தது.

மின்வலு மற்றும் சக்திவள அமைச்சின் செயலாளர் அவரது 2012 திசெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட பீச/ஐஏ/22/வீஓஎல் ஆம் இலக்க கடிதத்தினால் இக் கொடுப்பனவை சகல ஊழியர்களிடமிருந்து அல்லது அதிகாரசபையின் தலைவரிடமிருந்து அறவிடுமாறு அதிகாரசபையின் தலைவரை அறிவுறுத்தியிருந்தார். எவ்வாறாயினும், இந்த அதிகாரமற்ற கொடுப்பனவை அறவிடுவதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2014 மே 20 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம் (எச்ஆர்எம்)

முறையான ஆளணி முகாமைத்துவம் அதிகாரசபையில் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அதிகாரசபையின் தற்போதைய ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை நிலைபேறான சக்திவள நிதியம் மற்றும் இலங்கை நிலைபேறான உத்தரவாத நிதியம் என்பவற்றின் முதலீட்டின் மீது 2008 முதல் 2013 வரையான காலத்தில் கிடைத்திருந்த ரூபா 39,618,010 தொகையான வட்டி வருமானம் உரிய நிதியங்களிற்கு அனுப்பி வைக்கப்படாது அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 அனுமதியற்ற கொடுப்பனவுகள்

அதிகாரசபையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிடமிருந்து முறையான அனுமதி இல்லாமல் பாவிக்கப்படாத விடுமுறைகளிற்காக ரூபா 1,038,866 ஆன தொகையை ஊழியர்கள் காசாக்கியிருந்தனர்

### 3.6 தீர்க்கப்படாத வெளிநாட்டு முற்பணங்கள்

வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் சமூகமளிப்பதற்கு வெப்ப ஆடை கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,880 மற்றும் ரூபா 116,991 தொகையான இரண்டு முற்பணங்களை அதிகாரசபையின் பணிப்பாளர் பெற்றிருந்தார். இம் முற்பணங்களை தீர்ப்பதற்கு 2014 மே 26 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கணக்கீடு
(ஈ) செயற்திட்டங்களை அமுல்படுத்தல்
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) கொடுப்பனவு நடைமுறை

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

எனது இலக்கம்: SEA/IA/CH/14/02

2015.01.20

கணக்காய்வாளர் அதிபதி

கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

இலக்கம் 306/72

பொல்துவ வீதி

பத்தரமுல்ல

கனம் ஐயா,

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் 2013 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (இ) பிரிவின் பிராகாரமுள்ள கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

குறித்த அறிக்கை தொடர்பான பதில்கள் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பிரசாத் கல்ஹேன

**தலைவர்**

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**

பிரதி: 01. திரு ஆர்.எம். ரத்நாயக்க - உதவிக் கணக்காய்வாளர் அதிபதி,

கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

## 2.2 *நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்*

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(a) இ.நி.வ.அ.ச. அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று காணிகள் சுவீகரித்தல் நடபடிமுறையை ஆரம்பித்துள்ளது. தற்பொழுது காணிக்கான உறுதிப்பத்திரங்கள் இலங்கை மகாவலி அதிகார சபையிடமிருந்து கிடைக்கவுள்ளன. அந்த காணியின் உறுதிப்பத்திரம் கிடைத்த உடனகத்தவுடன் காணியின் பெறுமான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டு அதன் சரியான பெறுமானத்தை சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2013 ஆம் ஆண்டு ஐந்தொகைக் கணக்கு ஒரு அடிக் குறிப்பாக கீழே தரப்பட்டுள்ளது. காணியின் உண்மையான விலைப் பெறுமானம் கிடைக்கும் நேரத்தில் சரியான பெறுமானம் கணக்குகளில் பேணப்படும்.

(b) நட்டம் பற்றி அறிக்கையிடும் பொருத்தமான ஆவணங்கள் நி.பி.கு. இலக்கம் 104 விண்ணப்பத்துடன் அந்த நட்டத்தைப் பதிவழிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நி.பி.கு. இலக்கம் 109 இன் பிரகாரம் அனுமதி கிடைத்த பின்னர் பதிவழிப்புச் செய்யப்படும்.

(c) நகல் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் காசுப் புத்தகத்தில் சில பதிவுகள் சீராக்கப்பட்டதன் விளைவாக காசுப் புத்தக நிலுவைக்கும் இறுதிக் கணக்குகளின் நிலுவைக்கும் இடையில் வித்தியாசம் எழுந்துள்ளது. கணக்காய்வு விசாரணையை கருத்திற்கொண்டு பதிவுகளின் இந்த வித்தியாசங்கள் தற்பொழுது சீர்செய்யப் பட்டுள்ளன. சரியான புள்ளிவிபரங்கள் இறுதி நிதி கூற்றுக்களில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

(d) இலங்கை நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியத்தின் முதலீடு சம்பந்தப்பட்ட ஏனைய முதலீடுகளுடனான நிரலில் 2013 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளில் தனியாகக் காட்டப்பட்டுள்ளது.

(e) சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதாக உங்களின் கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. WIP கருத்திட்டத்திலிருந்து நிதிகள் மாற்றப்பட்டிருப்பது இதற்கான காரணமாகும். WIP கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த நிதித் தொகைகள் குறித்த ஆண்டு காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் எனக் காட்டப்படவில்லை.

(f) இந்த இனங்காணப்படாத வைப்புக்கள் எமது வாடிக்கையாளர்களின் மூலம் எமது வங்கிக் கணக்குக்கு நேரடியாக வைப்புச்செய்யப்படுகின்றன. இத்தகைய நிதித் தொகைகளில் அதிகமான தொகைகள் தற்பொழுது இனங்காணப்பட்டு கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளன.

(g) பிழையைத் திருத்துவதற்கு நாம் ஏற்கெனவே நடவடிக்கையை எடுத்துள்ளோம். CFL மின்குமிழ் கடன் நிலுவை தற்பொழுது 2013 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சரியாகக் காட்டப்பட்டுள்ளது.

(h) கணக்காய்வாளர் அதிபதியின் இந்த அவதானிப்பு சரியானது என்பதுடன் அது
ஏற்றுக்கொள்ளப்படுகின்றதுமில்லியன் ரூபா மூலதன மானியம் 6.9 இந்த .
தவறுதலாக மீண்டெழும் மானியத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளதுஇது ,ஆனால் .
ஆம் ஆண்டு 2013 தற்பொழுது

(i) மேற்குறித்த (e) இன் கீழ் இது பற்றி விளக்கப்பட்டுள்ளது.

(j) மோட்டார் வாகனங்களின் பாதுகாப்பு முறைமை (GPS) மூலதனச் செலவினமாகக் கருதப்படும் மூலதனச் சொத்துக்களின் ஒரு மேம்பாடாகவும், புனரமைப்பாகவும் கருதப்படுகின்றது.

(k) சூரிய சக்திப் பலகைகளுக்கும் சக்தி உபகரணங்களுக்குமான தேய்மான ஏற்பாடு தற்பொழுது சீராக்கப்பட்டுள்ளது. கணனிகளிலுள்ள வித்தியாசம் குறித்த ஆண்டு காலப் பகுதியில் செய்யப்பட்ட ஒரு கொள்வனவுடன் தொடர்புபட்டதல்ல.

(l) நிதிக் கூற்றின் புள்ளிவிபரங்கள் காணி சுவீகரித்தலினது இந்த வைப்புக்களில் தேறிய நிலுவையாகும். முதலீட்டுத் தரப்புகளினால் வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பிரதேச செயலகங்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அடங்காமல் இயக்கச்செயற்பாட்டுப் பிரிவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் காணி சுவீகரித்தல் தொகையில் காணப்படும் வித்தியாசத்திற்கு காரணமாகும்.

(m) இயக்கச்செயற்பாட்டுப் பிரிவில் கிடைக்கக்கூடிய தகவல்கள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்ட மாதத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். எவ்வாறாயினும், கணக்கீட்டுத் தகவல்கள் செலவுத் திகதியின் அடிப்படையில் கணக்குகள் பிரிவின் மூலம் பேணப்பட்டு வருகின்றன. ஆதலால் வித்தியாசம் காணப்படுகின்றது.

### 2.2.2 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகைகள்

(a) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் பொருட்டு 2013 ஆம் ஆண்டிற்கான கிடைக்க வேண்டிய தொகைகளின் ஒரு காலப் பகுப்பாய்வைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(b) அவதானிக்கப்பட்டுள்ள அமைச்சுக்கான 8 மில்லியன் ரூபா கடன் 2013 ஆம் ஆண்டில் எமக்கு முழுமையாக செலுத்தித் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதிக் கொடுக்கல்வாங்கல் சரியான முறையில் சக்தி நிதியத்திலிருந்து பெற்ற கடன் தொடர்பான தொகையாக கணக்கீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது.

### 2.2.3 இணக்கல்செய்யப்படாத வித்தியாசங்கள்

(a)
(b) 2012 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை சீராக்குவதற்காக மேற்கொள்ளப் பட்ட பதிவுகளினால் இந்த வித்தியாசங்கள் ஏற்பட்டுள்ளன. கணக்காய்வு விசாரணைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்த சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 2.3 சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இனங்காமை

(a) வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திலிருந்து வரவுசெலவுத்திட்ட வரையறைகளை எழுத்தில் பெற்றதன் பின்னர் மாத்திரமே குறித்த ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்படலாம். 2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தின் வரையறை 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் திறைசேரியினால் கிடைக்கப் பெற்றது. ஆகையால், கணக்காய்வு நகல் அறிகையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு குறித்த ஆண்டு ஆரம்பமாவதற்கு

3 மாதத்திற்கு முன்னர் குறித்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து அதற்கான அங்கீகாரத்தைப் பெற முடியாது.

(b) நிலையான சொத்துக்களில் பதிவேடு இ.நி.வ.அ.ச. சபையில் பல ஆண்டுகளாகப் பேணப்பட்டு வருகின்றன. பொருட்பதிவேடு தொடர்பான தகவல்கள் சரியான முறையில் வகைப்படுத்தப்பட்டுப் பேணப்படாமை மாத்திரமே குறைபாடாகக் காணப்பட்டது. விடயத்தைத் தனித்தனியாக வகைப்படுத்திப் பேணும் நிமித்தம் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்களின் பதிவேடும் உரிய முறையில் பேணப்படுகின்றது.

(c) கணனி வன்பாகங்கள்/மென்பாகள் பதிவேடும் நிலையான சொத்துக்களுக்காகப் பேணப்படும் மேற்குறித்த பதிவேட்டில் பல பிரிவுகளிலும் பேணப்படுகின்றது.

(d) நி.பி.கு. இலக்கம் 396 இற்கு இணங்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 3 *நிதி சார்ந்த மீளாய்வு*

### 3.1 *நிதி சார்ந்த பெறுபேறுகள்*

கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்பு புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

### 3.2 *இயற்கச்செயற்பாடு தொடர்பான வினைத்திறனின்மைகள்*

#### 3.2.1 **ஒரே மாதிரியான மூன்று வகை மின்சார வாகனங்களை உற்பத்தி செய்தல்**

மேற்குறித்த கருமத்தைப் பொறுப்பேற்ற உற்பத்தித் தரப்பினால் வாகனத்தின் செசியைப் பொருத்தி நிறைவு செய்ய முடிந்தது. 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி குறுந்தூர ஓட்டப் பரிசீலனை செய்துகாண்பிக்கப்பட்டது. இந்தச் சாதனையின் ஒரு வீடியோ பதிவை <http://youtu.be/nrYFROJL25c> என்ற எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். குறித்த உற்பத்தித் தரப்பு தற்பொழுது நிதி வரையறை காரணமாக, தாமதமான ஒரு நிலையில் வாகனத்தின் மேற்பாகத்திற்கு செசியைப் பொருத்தும் வேலையைக் கவனித்து வருகின்றது. குறித்த ஒப்பந்தம் மீறப்பட்டமை பற்றிக் குறிப்பிட்டு சட்ட நடவடிக்கையை எடுக்கும் பொருட்டு சட்டமா அதிபரின் திணைக்களத்திற்கு இது பற்றி அறிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்டதாக 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதி சட்டமா அதிபரினால் (Ref. C/154/14/SLSEA) அறிவிக்கப்பட்டுள்ளது.

#### 3.2.1 **பத்து காற்று அளவீட்டுக் கோபுரங்களின் நிர்மாணம் ,அவற்றின் நிறுவுகை , உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தல் மற்றும் விநியோகம்**

(a) மேற்குறித்த கூற்று பகுதியளவில் சரியானது. எனினும், 2013 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 08 ஆம் திகதியில் 3 காற்றுக் கோபுரங்களின் மூலம் மாத்திரமே தரவுகளை அதிகார சபையினால் பெற்றுக்கொள்ள முடிந்தது. கணக்காய்வாளர் அதிபதியின் பதவியணி அதிகார சபைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த நேரம் தொலை உள்நுழைவு வசதி மூலம் அந்த 3 காற்றுக் கோபுரங்களை மாத்திரம் அணுகக்கூடியதாக இருந்தமையும் மற்றும் காற்றுமூல சக்தித் தரவுகள் சேகரிப்பு நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட

சில அளவீட்டுக் கருவிகளின் இயக்க ஆயுட்கால முடிவடைந்திருந்தமை ஆகியன இதற்குக் காரணமாகும். ஒரு சில காற்றுக் கோபுரங்களுக்கான தொலை அணுகுமுறையும், தரவுகள் சேகரிப்பும் மட்டுப்பாட்டுக் காணப்பட்டிருந்தாலும், இந்தக் காற்றுக் கோபுரங்களின் நிஜமான நிலைமைகளை அவதானிக்கும் வழமையான விஜயங்களை மேற்கொள்வதற்கும் மற்றும் தேவையான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கும் இயந்திர உதவியின்றி கடந்த ஒரு சில ஆண்டுகளில் தரவுகள் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அதிகார சபையின் பிராந்திய காற்று வள மதிப்பீடுகளுக்குப் புறம்பாக காற்றுமூல சக்திக் கருத்திட்ட அபிவிருத்தி தரப்புகளுக்கு இந்தக் காற்றுத் தரவுகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

இந்தக் கூற்று சரியானதாகவிருந்தாலும், கடலோரப் பகுதிகளிலிருந்த காற்றுக் கோபுரங்களினதும் சம்பந்தப்பட்ட கருவிசாதனங்களினதும் இயக்க காலம் 2-3 வருட காலங்களாகும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஆதலால், நாட்டின் கடற் பகுதிகளில் அமைந்துள்ள அதிகமான காற்றுக் கோபுரங்களின் எதிர்பார்த்த இயக்க ஆயுட்காலம் ஏற்கெனவே முடிவடைந்துள்ளது. ஆகவே இந்தக் காற்றுக் கோபுரங்களுக்கான பாரிய புனரமைப்புப் பணிகளும் மற்றும் கருவிசாதனங்கள் மீளிடுகையும் மேற்கொள்ளப்படாத வரையில் காற்று அளவீட்டு நடபடிமுறையை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது. மேலும், 2 ஆண்டுகளின் தரவுகள் காற்று வள மதிப்பீட்டு நோக்கங்களுக்குப் போதுமானதாகும் எனக் கருதப்படுகின்றது. இந்தக் காற்றுக் கோபுரங்களில் அதிகமான கோபுரங்களுக்கான திருப்தியான காற்றுத் தரவுகளை அதிகார சபையினால் சேகரிக்க முடிந்துள்ளது. மேலும், இந்தக் காற்றுக் கோபுரங்களைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்ட தரவுகள் காற்றின் பண்பம்சங்களையும், பகிர்ந்தளிப்பையும் மற்றும் பிராந்திய காற்றுமூல சக்தி சாத்தியங்களையும் இனங்காண்பதற்கும், இறுதியாக பிராந்திய காற்று வள வரைபடங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தரவுகள் இந்தப் பிராந்தியங்களின் காற்றுமூல சக்திக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டு முதல் பல காற்றுமூல சக்திக் கருத்திட்டம் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் நிகழ்ந்துள்ளன. இதே நேரம், நிலையான காற்றுமூல சக்திக் கொள்திறன் 2014 ஆம் ஆண்டு மே மாதம் ஆகும் போது 88.45 மெ.வொ. அளவில் இருந்தது. இந்தக் காற்றுமூல சக்திக் கருத்திட்டங்களின் அபிவிருத்தித் தரப்புகளுக்கு தமது அத்தகைய கருத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்ட நேரத்தில் இந்தக் காற்றுக் கோபுரத் தரவுகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தன.

பயன்பாட்டு அளவிலான சக்தி உற்பத்திற்குரிய காற்றுமூல சக்தித் தொழில் நுட்பங்களின் பயன்பாட்டிற்கும் மற்றும் ஓப்-க்றிட் சக்திப் பிரயோகங்களுக்கும் சாத்தியமான பிரதேசங்களை இனங்காண்பதும், காற்றுமூல சக்திக் கருத்திட்ட அபிவிருத்தித் தரப்புகளின் கருத்திட்டம் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அடிப்படைக் காற்றுத் தரவுகளைப் பெற்றுக் கொடுப்பதும் அதிகார சபை இந்தக் கருத்திட்டத்தினூடாக எதிர்பார்க்கும் குறிக்கோளாகும் என்பதால் அதிகார சபை எதிர்பார்த்த குறிக்கோளை வெற்றகரமாக அடைந்துள்ளது.

(b) நடுக்குடாவில் நிர்மாணித்த கோபுரம் ‘மன்னார் மாவட்டத்தில் காற்றுமூல சக்தி அபிவிருத்திற்கான தலைமைத் திட்டமான’ ஆ.அ.வ. நிகழ்ச்சித்திட்டத்திற்கான 80 மீற்றர் உயரமுடைய புதிய காற்றுக் கோபுரங்களின் நிர்மாணங்களுக்கு உதவும் நிமித்தம் இந்தக் கோபுரம் அகற்றப்படுவதற்கு முன்னர் 1 வருட காலமாக இயங்கி இயங்கியிருந்தது. முன்னைய 50 மீற்றர் உயரமான காற்றுக் கோபுரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கருவிசாதனங்கள் (தங்கு வயர் அடங்கலாக) என்பன தொடர்பான விபரங்களை கணக்காய்வாளர் அதிபதியினது திணைக்களத்தின் பரிசீலனைக்கு வழங்க முடியும்.

அதிகார சபையின் காற்றுக் கோபுரத்தின் ஒரு வருட இயக்கக் காலப்பகுதியில், அதனை காற்றுமூல சக்திக் கருத்திட்ட அபிவிருத்திற்கு சிறந்த ஒரு ஸ்தலமாக இனங்காண முடியந்தது. ஆகையால், மின்வலு சக்தி அமைச்சின் கீழ் (மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டம்) மிகவும் பரந்த காற்று அளவீட்டு நடவடிக்கைக்கான 80 மீற்றர் உயரமுடைய அரச கலை காற்றுக் கோபுரத்தைத் தாபிப்பதற்காக இந்தக் காற்றுக் கோபுரம் அகற்றப்பட்டு அது அமைந்திருந்த இடம் பயன்படுத்தப்பட்டது.

பிராந்திய காற்று மாதிரிகளை இனங்காணுவதற்கான ஆ.அ.வ. ஆய்வு நிமித்தம் இந்த 80 மீற்றர் உயரமுடைய காற்றுக் கோபுரத்தின் தரவுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. மன்னார் தீவுக்கும் அதை அண்மித்த பகுதிகளுக்குமான விரிவான காற்று வள வரைபடம் இதே நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே தயாரிக்கப் பட்டுள்ளது. இந்த ஆய்வின் பயனாக, இந்தப் பகுதியின் காற்றுமூல சக்திக் கருத் திட்ட அபிவிருத்தியின் மொத்த சக்திக் கொள்திறன் 375 மெ.வொ. ஆகும் என இனங்காணப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட இந்த சாத்தியமான 100 மெ.வொ. சக்திக் கொள்திறன் அடிப்படை ரீதியில் ஒரு காற்றுமூல சக்திப் பேட்டை எண்ணக்கருவாக அபிவிருத்தி செய்யப்படும் என அறிக்கையிடப்படுகின்றது. மேற்குறித்த ஆ.அ.வ. நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயற்படுத்துகை அதிகார சபை என்ற ரீதியில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை இந்தப் புதிய காற்றுக் கோபுரங்களின் தரவுகளுக்கும் அதன் முடிவுகளுக்கும் பிரவேசத்தைக் கொண்டிருக்கும். எதிர்காலத்தில், இந்தத் தரவுகள் காற்றுமூல சக்திக் கருத்திட்டம் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

### 3.2.4 மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டத்திற்கான காணி சுவீகரித்தல்

இ.நி.வ.அ. சட்டத்தின் 30 ஆம் பிரிவுக்கு இணங்க, அதிகார சபையின் ஏதாவது ஒரு நோக்கத்தின் நிமித்தம் அதிகார சபையினால் சுவீகரிக்கப்படும் ஒரு காணி ஒரு பொது நோக்கத்திற்கு (மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி அடங்கலாக) எனக் ஊகிக்கப்படுதல் வேண்டும். காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் இந்தக் காணியை சுவீகரித்துக்கொள்ளலாம். கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில், இந்த நடவடிக்கைக்கு ஆகக்குறைந்தது 72 வார காலப்பகுதி அவசியம் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் காணி சுவீகரிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்படுகின்றன. காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, அந்தந்தப் பிரதேச செயலாளர்

அலுவலகங்கள், நிலஅளவைத் திணைக்களம், அரசாங்க அச்சக திணைக்களம், விலைமதிப்பீட்டுத் திணைக்களம், காணிகள் பதிவுத் திணைக்களம்,போலீஸ் திணைக்களம், நீதிமன்றங்கள், சட்டமா அதிபர் திணைக்களம் முதலியன போன்ற இந்த நிறுவனங்களின் பங்களிப்பில் காணி சுவீகரித்தல் நடவடிக்கை தங்கியிருக்கும்.

காணிகளை சுவீகரிக்கும் நிமித்தம் பணம் வைப்புச்செய்யப்பட்ட பதினொரு கருத் திட்டங்களில், காணியின் சொந்தக்காரர்களிடமிருந்து கருத்திட்ட அபிவிருத்தித் தரப்புகள் தாமாகவே காணிகளைக் கொள்வனவு செய்துள்ளதால் மூன்று கருத் திட்டங்கள் கைவிடப்பட்டன. மற்றைய மூன்று கருத்திட்டங்களில், இ.நி.வ.அ.ச. கருத்திட்ட அபிவிருத்தித் தரப்புகளிடம் அவர்களுக்கு இன்னும் காணி சுவீகரிப்பு அவசியமான என வினவியுள்ளது. அதிகார சபை அந்தத் தரப்புகளின் பதில்களை எதிர்பார்த்த வண்ணமுள்ளது. எஞ்சிய கருத்திட்டங்களுக்கான காணி சுவீகரிப்பு விடயங்கள் நிகழ்ந்து வருகின்றன.

### 3.2.5 சுவிட் ஏசியா நிகழ்ச்சித்திட்டம்

அமைச்சின் செயலாளர் வழங்கிய அறிவுரைகளுக்கு இணங்க செயல்படுதல் வேண்டும் என்பதும் திறைசேரியுடனும், செயலாளருடனும் குறித்த விடயம் பற்றி கலந்துரையாடி நட்பு ரீதியான ஒரு தீர்வை அடைய வேண்டும் என்பதும் இது தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதி முன்வைத்த ஆலோசனையாக இருந்தது. அதன் அடிப்படையில், குறித்த விடயம் தொடர்பான செயற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டன. அவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

குறித்த விடயம் படிமுறைப்படுத்தப்பட்ட விதம் பற்றி 2012.12.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மின்வலு சக்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. மின்வலு சக்தி அமைச்சின் செயலாளரினூடாக திறைசேரியின் செயலாளருக்கு அனுப்பிய 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டது. அதனையடுத்து, பின்னர் இ.நி.வ.அ.ச. சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயல்-நோக்கின் கீழ் கொண்டுவரப்பட்டது. அந்த அமைச்சின் செயலாளரிடமிருந்து ஆலோசனையைப் பெற்றதன் பின்னர் அந்த அமைச்சினூடாக அந்தக் கடிதம் திறைசேரிக்கு அனுப்பப்பட்டது. நிலைமையை முழுமையாகத் தெளிவுபடுத்தி திறைசேரியின் செயலாளருக்கும் மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கும் பிரதிகள் சகிதம் சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரின் ஊடாக COPE செயலாளருக்கு 2014.12.02 ஆம் திகதி மேலும் ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

### 3.3 *மனித வளங்கள் முகாமைத்துவம் (ம.வ.மு.)*

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து (மு.சே.தி.) ஆளணிக்கான அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் உடனடியாக ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் (ஆ.தி.) தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3.4 *சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்*

திறைசேரியிலிருந்து கிடைத்த வசக்கட்டுநிதி போதாத காரணத்தினால், சக்தி உத்தரவாத நிதியத்திலிருந்து கிடைத்த வட்டி வருமானத்தின் சில தொகைகள் இ.நி.வ.அ.ச. செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு அதிகார சபையால் பயன்படுத்த வேண்டியிருந்தது. எனினும், இ.நி.வ.அ.ச. உயர் முகாமைத்துவத்தினால் இது எதிர்காலத்தில் மீளக்கருத்திற்கொள்ளப்படும்.

### 3.5 *அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள்*

2013.07.30 ஆம் திகதி 23/2013 நி.வ.அ.ச. சபை அங்கீகாரப் பத்திரத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சபையின் பணிப்புரையின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தும், ஆளணி மற்றும் சம்பளங்கள் ஆணைக்குழுவிடமிருந்தும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நிமித்தம் ஒரு கோரிக்கைக் கடிதம் 2013.08.29 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. தலைவர் 2013.12.30 ஆம் திகதி கிடைத்த மு.சே.தி. பதில் கடிதத்தின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவுக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார். ஊழியர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் முக்கியமாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 3.6 *தீர்ப்பனவுசெய்யப்படாத வெளிநாட்டு முற்பணங்கள்*

நிதிப் பிரமாணக்குறிப்பின் பிரகாரம், வெப்பம் பேணும் அங்கிக்கான குறித்த இந்த முற்பணத்தை உண்மையான நோக்கத்தின் பேரில் அந்தத் தொகை செலவிடப் பட்டுள்ளது என்பதை அறியப்படுத்தும் ஒரு கடிதத்தை அனுப்பி வைப்பதன் மூலம் தீர்ப்பனவு செய்துகொள்ள முடியும். கூறப்பட்ட அந்த ஊழியரினால் அத்தகைய ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த ஊழியர் இந்த அதிகார சபையில் பணியாற்றுவதுமில்லை. இந்த முற்பணத்தைத் தீர்ப்பனவு செய்யுமாறு அறிவித்து அந்த ஊழியருக்கு ஒரு நினைவூட்டல் கடிதம் ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது.